1995

# மருந்து

## கோபாம் மருந்து முறை சிறப்பிதழ்

மருத்துவம்

*கௌரவ ஆசிரியர் :* வைத்திய பேரறிஞர் க. பாலசுப்பிரமணியம்

*நிர்வாக ஆசிரியர் :* வைத்தியாச்சாரிணி பா. இராதாதேவி

*வெளியீடு :* சித்தவைத்திய கூட்டுறவுச் சங்கம்

# MARUNTU

## ANNUAL SIDDHA MEDICAL JOURNAL

*Honorary Editor :* **Vaidya Peraringnar Dr. K. Balasubramniam**
*Honorary Special Advisor - Siddha Medical Co-operative Society.*
*Chairman - Lanka Siddha Medical Research Organisation.*

*Administration Editor :* **Vaidyachariny Dr. B. Rathadevy**
*Managing Director - Siddha Medical Co-operative Society.*

*Published by :* **Siddha Medical Co-operative Society,**
572, *Hospital Road, Jaffna.*

சர்வதேச கூட்டுறவாளர் தின சிறப்பு வெளியீடு

7. 7. 1995

அன்பளிப்பு 100/=

UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
**Prof. K. Kunaratnam**
*B Sc. (Cey.), Ph. D. (Lond.),*
*D. I C. (Lond.),*
Vice Chancellor,
Telephone 0252834

*Thirunelvely,*
*Jaffna,*
*Sri Lanka.*
16. June, 1995

# *Greeting Message from Vice - Chancellor, University of Jaffna*

I am happy to send this message on the occasion of the release of the journal 'Maruntu' to mark the third anniversary of the Co-operative Pharmacy. This issue of 'Maruntu' in unique in that it is essentially a pharmacopoeia containing formularies for the preparation of Siddha Medicines. It will certainly be of immence use to both practioners and patients.

I understand that the Siddha Medical Co-operative Society is the only Co-operative Society engaged in the production of Siddha Medicines in the whole country and that the Co-operative Pharmacy run by it has produced and distributed around two hundred patent medicines to Government and private medical institutions.

The Society is also engaged in the development and extension of Siddha Health Services and its Services are to be extended to other areas in the North - East and to Colombo.

The services of the Siddha Medical Co–operative Society in reviving our traditional medical system through publication of periodicals like 'Maruntu' and production and distribution of Siddha medicines are praiseworthy especially at a time like this when people in this region are facing enormous difficulties in getting proper medical treatment for their ailments. I wish the Society continued success in their effort to serve the people.

**Prof. K. Kunaratnam**
*Vice-Chancellor*

# கூட்டுறவு ஆக்க ஆணையாளரின்

# வாழ்த்துச் செய்தி


## " மருந்து "

தமிழர் தமக்கென வரலாறு கொண்டவர்கள்
தமிழர் தமக்கென பண்பாடு கொண்டவர்கள்
தமிழர் தமக்கென கலைப் பாரம்பரியம் கொண்டவர்கள்
தமிழர் தமக்கென இலக்கியச் செல்வம் கொண்டவர்கள்
அந்த வகையில்
தமிழர் தமக்கென வைத்தியமுறை கொண்டவர்கள்
அந்த வைத்திய முறையை வளர்ப்பதே
மருந்தின் நோக்கமெனஅறிந்து
பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.
'' மருந்து '' அருமருந்தாக அமையட்டும்!
என் வாழ்த்துக்களும் ஆசிகளும்.


**சுந்தரம் டிவகலாலா**
கூட்டுறவு ஆக்க ஆணையாளரும்
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும்,
பிரதிச் செயலாளர், கல்வி
கலாச்சார, விளையாட்டுத்துறை அமைச்சு
வட கிழக்கு மகாண சபை,
திருகோணமலை.



மாவட்டச் செயலரும், அரசாங்க அதிபருமான திரு. கா. மாணிக்கவாசகர் 12.8.92 ல் கூட்டுறவு மருந்துச்சாலையில் முதல் விற்பனை விழாவை மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைக்கிறார். கூ. அ. உ. ஆணையாளரும், சி.வை கூ. ச. தலைவருமான திரு. தி. சபாரத்தினம், சங்கத்தின் கௌரவ சிறப்பு ஆலோசகர் வைத்திய பேரறிஞர் க. பாலசுப்பிரமணியம் அருகில் காணப் படுகின்றனர்.



சித்த வைத்திய கூட்டுறவு சங்கத்தினால் 29.8.93 ல் யாழ் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடாத்தப்பெற்ற சித்த வைத்திய கருத்தரங்கில் பேராசிரியர் முதறிஞர் க. சி. குலரத்தினம் உரையாற்றுகின்றார். கூ. அ. ஆ. உ. திரு. தி. சபாரத்தினம் தலைமை தாங்குகிறார். (வலம்)



1994 ல் யாழ் இந்துக் கல்லூரியில் நடந்த சித்த மருத்துவ கண்காட்சியை பி. உ. உ. ஆணையாளர் திரு. சு. டிவகலாலா பார்வையிடுகிறார். நடுவில் முகாமைப்பணிப்பாளர் வைத்தியாச் சாரினி பா. இராதாதேவியும் சித்தவைத்திய கௌரவ சிறப்பு ஆலோசகர் வைத்திய பேரறிஞர் க. பாலசுப்பிரமணியமும் காணப் படுகின்றனர்.



வடக்கு கிழக்கு மாகாண ஆயுர்வேத பணிப்பாளர் வைத்திய கலாநிதி பூ. உரோமகேசுபரன் அவர்கள் கூட்டுறவு மருந்துச் சாலைக்கு 29.04.1994 வருகை தந்தபோது (வலப்பக்கம் இரண்டாவதாக) காணப்படுகிறார். தலைவர் திரு. தி. சபாரத்தினம் நடுவில் காணப்படுகிறார்.



கோப்பாய் ப. தெ. வ. அ. கூ. சங்க சித்த சுகாதார சேவை ஆரம்ப விழாவில் சிறுவர் பாதுகாப்பு நிதிய யாழ் பிரதிநிதி திரு ஜோன் குட் கான் உரையாற்றுகிறார். கூ. அ. உ. ஆணையாளர் திரு. தி. சபாரத்தினம் தமிழ்ப் படுக்துகிறார். அருகில் சித்த சுகாதர சேவை அமைப்பாளர் வைத்திய போறிஞர் க. பாலசுப்பிரமணியம் அமர்ந்திருக்கிறார்.



யாழ்ப்பாணத்தில் நடந்த கண்காட்சியில் கூட்டுறவு மருந்துச் சாலையின காட்சியறையை உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கத்தலைவரும், பருத்தித்துறை பிரதேசசபை செயளாளருமான திரு ச. செவ்வந்திநாதன் பார்வையிடுகிறார். கௌரவ சிறப்பு ஆலோசகர் வைத்தியபோறிஞர் க. பாலசுப்பிரமணியம் விளக்கப்படங்களை விளங்கப்படுத்துகிறார்.

# நூல்முகம்

வரலாற்றுத் தொன்மைமிக்க பழம்பெரும் நாடாகிய ஈழமண்டலத்தில் ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரேயே சிறந்து விளங்கியது தமிழரின் சித்த மருத்துவம். தமிழ் மன்னராட்சிக் காலத்திலே அரசவையிலே மிகவும் உன்னதமான இடத்தைப் பெற்றிருந்தது இந்த நாட்டின் சொந்த மருத்துவம். பல மருத்துவ நூல்கள் எழுதப் பெற்று அவை மருத்துவப் பண்டிதர்களின் தமிழ்ப்பேரவையிலே அங்கீகரிக்கப் பெற்ற வரலாறுகளை நாம் அறிய முடிகிறது. ஆதுலர்சாலைகளும், மருந்துச் சாலைகளும், மூலிகைத் தோட்டங்களும் அரசரால் நடாத்தப்பட்டதையும், அதற்கு அவர்கள் வழங்கிய நன்கொடைகளையும், மானியங்களையும், கூலிகளையும் – செப்புப் பட்டயங்களும், சாசனங்களும் எடுத்தியம்புகின்றன. இத்தனை சீரும், சிறப்பும் பெற்று சித்த மருத்துவம் விளங்கிய காலத்தில் நாட்டில் நோய்களையோ, பிணிகளையோ, நோயாளர்களையோ காணமுடிவதில்லை. நாட்டுமக்கள் ஒழுங்காக வகுக்கப்பட்ட தமிழர் சுகாதார விதிகளைக் கடைப்பிடித்து வந்தார்கள். மருத்துவர்கள் நோய்த்தடுப்பு மருந்துகளையும் காயகற்பங்களையும் வழங்கி மக்களை சுகதேகிகளாக காப்பாற்றி வந்துள்ளார்கள். மன்னனும், பஞ்சமும், பட்டினியும் நேராமல் மக்கள் வறுமையை அறியாதவர்களாக போசாக்கான உணவை உண்டு பலசாலிகளாக வாழ்வதற்கு பாதுகாப்பு அளித்து வந்தான். அது தமிழனின் ஓர் பொற்காலமாகும். நமது நாட்டின் மீது அந்நியப்படையெடுப்பின் பின் சித்த சுகாதார சேவை சீர்குலைந்து போனது. சித்த மருத்துவம் சீரழிந்துபோனது. இவற்றினால் மக்கள் நலன் அழிவுற்றுப்போனது. எமது மருத்துவ முறை நமது மக்களைக் காப்பாற்றக் கூடியது, இந்நாட்டின் தட்ப வெப்ப நிலைகளுக்கு ஏற்றது, என்ற நம்பிக்கை இன்று மீண்டும் தமிழ் மக்களிடையே மேலோங்கியிருப்பது, சித்த மருத்துவத்தின் சிறப்பான எதிர்காலத்தை எடுத்துக் காட்டுவதாக அமைகின்றது. இந்த நிலையில் சித்த வைத்தியக் கூட்டுறவுச் சங்கம் கடந்த சில ஆண்டுகளாக சித்த மருத்துவத்தை வளர்ப்பதற்கு, அதனை விரிவாக்குவதற்கு, அதனை மேம்படுத்துவதற்கு அவற்றின் பலன்களை தமிழ்மக்களுக்கு கிடைக்கச் செய்வதற்கு எடுத்துவரும் நடவடிக்கைகள் தமிழ் உலகம் அறிந்த ஒன்றாகும். எமது மருந்து உற்பத்திகளின் மருந்து முறைகளை வைத்தியர்கள், வாடிக்கையாளர்கள் சகலரும் அறிந்து கொள்வதற்காக சங்கத்தின் கௌரவ சிறப்பு ஆலோசகர் வைத்திய பேரறிஞர் க. பாலசுப்பிரமணியம். அவர்கள் நூலாக எழுதி உதவியுள்ளார்கள், அதற்காக சங்கத்தின் சார்பில் அவருக்கு எமது பாராட்டுக்களையும், நன்றியையும் தெரிவிக்கின்றோம். இத்தகவல்கள் எமது சங்கத்தின் பால் மேலும் நம்பிக்கையை வளர்க்க உதவும் என்பதில் ஐயமில்லை. எமது மருந்து உற்பத்திக்கும், விநியோகத்திற்கும் உதவியும், ஒத்துழைப்பும் வழங்கி வருகின்ற ஊராட்சி சபைகளின் அதிகாரிகளுக்கும், மருத்துவ அதிகாரிகளுக்கும், தொடர்ந்தும் உதவியும் ஒத்துழைப்பும் வழங்க எதிர்பார்த்து எமது நன்றிகளையும். அன்பையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். எமது நோக்கங்களை நிறைவேற்ற இணைந்த ஒத்துழைப்புக்களை வழங்கிவரும் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு சங்கங்களுக்கும், தனிப்பட்ட முறையில் சேவைகளை வழங்கிவரும் வைத்தியர்களுக்கும், கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், பதிவாளருமாகிய திரு சுந்தரம் டிவகலாலா அவர்களுக்கும் எமது நன்றிகள் உரித்துடையவை. கூட்டுறவு வரலாற்றில் சித்த மருத்துவத்திற்காக உலகிலேயே அமைக்கப்பட்ட முதலாவது கூட்டுறவுச் சங்கம் சித்த வைத்திய கூட்டுறவுச் சங்கமாகும் இவ்வாண்டு சர்வதேச கூட்டுறவாளர் தினத்தை சிறப்பிக்கும் வகையில் இவ்விதழ் வெளிவருகிறது.

தி. சபாரத்தினம்
வடபிராந்திய கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளரும்
சித்த வைத்திய கூட்டுறவு சங்கதலைவரும்

# சித்த மருந்தியல்

மருந்தியலில் சித்தர்களின் ஆற்றல் அளவிட முடியாத ஒன்றாகும். சித்த மருந்துகள் உள்மருந்து, வெளிமருந்து என மொத்தம் 64 வகையாகும். அவற்றுள் பல வகையான மருந்துகளை சித்த வைத்திய கூட்டுறவுச் சங்கம் உற்பத்தி செய்து வருகின்றது. இவை இந்த நாட்டின் பிரபல வைத்தியர்கள் பலராலும் கையாளப்பட்ட முறைகளாகும். இம் மருந்துமுறைகளை ஆராய்ச்சி நிலையத்திற்கு வழங்கிய வைத்தியப் பெருமக்களுக்கு எமது நன்றிகள் உரித்தாகுக. ஆராய்ச்சி நிலையத்தில் பலவருட ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு, புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டவையும், தற்கால வாழ்க்கை முறைக்கேற்பவும், கால விரைவுக்கு ஏற்பவும் அமைக்கப்பட்ட மருந்துகளும், இலங்கா சித்த வைத்திய ஆராய்ச்சி மன்றத்தின் அங்கீகாரத்துடன் பலவருடமாக நோய்களை நீக்குவதில் சிறந்ததென அநுபவரீதியாக காணப்பட்டவையாகும். பொதுவாக இம் மருந்துகள் பாவனைக்கு இலகுவாக்கப்பட்டுள்ளன. அவற்றின் அதிகரித்த மணங்கள் விரும்பத்தகாத சுவைகள் சில மூலிகைகளைப் பாவித்துக் குறைக்கப்பட்டுள்ளன. மருந்தின் ஆற்றல் இவற்றால் மேம்பட்டுள்ளது. நஞ்சுத்தன்மையுள்ள சகல மூலிகைகளும் சுத்தி செய்யப்பட்டபின்னரே மருந்துகளில் சேர்க்கப்பட வேண்டும். எம்மால் ஆராய்ச்சி செய்யப்பட்டு 'கோபாம்'' நிறுவனத்தினால் உற்பத்தி செய்யப்பட்டு மக்கள் பாவனைக்கு விடப்பட்டுள்ள இம்மருந்துகள் கடந்த மூன்று வருடங்களாக வைத்தியர்களாலும், ஆங்கில வைத்தியர்களாலும், தமிழ் மக்களாலும் பாராட்டப் பெற்று பெரும்வரவேற்பை பெற்றுவருகின்றன. இம்மருந்துகள் எல்லா வைத்தியப் பெருமக்களும் அறிந்து கொள்வதற்கு வசதியாக ''கோபாம் மருந்து முறைகள்'' மருந்து இதழின் மூன்றாவது ஆண்டு மலரில் வெளிவருகின்றது. இதனால் சித்த மருத்துவத்துறை சார்ந்தவர்களும் சித்த மருத்துவர்களும் நன்கு பயன் அடைவார்கள் என்பது திண்ணம். சித்த மருத்துவ மரபைப்பின்பற்றி இம்மருந்து முறைகள் அமைந்திருப்பது இதன் சிறப்பாகும். மருந்து தயாரிப்பில் மூலிகைகளின் குணம் முக்கியமானது. ஒரு மூலிகையிலேயே வேருக்கும் வேர்ப்பட்டைக்கும் வெவ்வேறு குணங்கள் உண்டு. மூலிகைகள் ஒன்றுசேரும் போது குணங்கள் வேறுபடுகின்றன. ஒரு மூலிகைக்கு பல பெயர்கள் உண்டு. ஒரு பெயருக்குப் பல மூலிகைகளும் உண்டு. ஆகவே மருந்துமுறையில் குறிப்பிடப்பட்ட மூலிகை அது தான் என்று நிச்சயப்படுத்திக் கொள்ள அறிவும் அனுபவமும் அவசியமானது. மூலிகை இன்னதென்று தெரிந்த பின்னரும் இதனை இனங்காணுவதற்கு பரம்பரை அறிவு மிக மிக அவசியமானது. ஒரு பதார்த்தத்தை பல முறைகளில் சுத்தி செய்யலாம். ஆனால் எவ்வாறு சுத்தி செய்வதால் நல்ல பலன் கிடைக்கும் என்பது அனுபவத்தின் வாயிலாக அறியப்பட வேண்டியது. எல்லாவற்றுக்கும் மேலாக சித்த மருந்துகளின் தரத்தினை எவ்வாறு பரிசோதிப்பது, தரமான மருந்துகளின் இலட்சணங்கள் எவை என்பவற்றை எல்லாம் விரிவாகவும் விளக்கமாகவும் சித்தர்கள் தெரிவித்துள்ளார்கள். ஒரு மருந்திற்கு பலமுறைகள் உள்ளன. இங்கு ஒரு முறையை இவ்விதழில் வெளியிடுகிறோம். ஏனைய முறைகளும், மற்ற மருந்துகளும் அடுத்த இதழில் வெளிவரும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

**வைத்திய பேரறிஞர் க. பாலசுப்பிரமணியம்**
*தவிசாளர், சித்தா வைத்திய ஆராய்ச்சி நிலையம்,*
*கௌரவ சிறப்பு ஆலோசகர், சித்த வைத்திய கூட்டுறவுச் சங்கம்*

# சித்த வைத்தியக் கூட்டுறவுச் சங்கம் (வரையறுக்கப்பட்டது)

பதிவு இல. J. P. / 2159 — திகதி 18-12-1993

## இயக்குநர் சபை

திரு. தி. சபாரத்தினம் கூ. ஆ. உ. ஆ. — தலைவர்

திரு. சா. செல்வரத்தினம் தலைவர் வ. மா. ப. தெ. கூ. ச. சமாசம் — துணைத்தலைவர்

திரு. நா. கணேசன் தலைவர், வலி. ப. தெ. கூ. ச. கொத்தணி — செயலாளர்

திரு. பொ. சின்னராசா சாவகச்சேரி ப. தெ. கூ. ச — உறுப்பினர்

திரு. தே. அந்தோனிப்பிள்ளை தலைவர் வட. ப. தெ. கூ. ச. கொத்தணி — உறுப்பினர்

திரு. சு. பொன்னுத்துரை சுன்னாகம் ப. தெ. கூ. சங்கம் — உறுப்பினர்

திரு. மு. தருமராசா அச்சுவேலி ப. தெ. கூ. சங்கம் — உறுப்பினர்

திரு. பொ. தம்பிஐயா யாழ்ப்பாணம் ப. தெ. கூ. சங்கம் — உறுப்பினர்

வைத்திய பேரறிஞர் க. பாலசுப்பிரமணியம் — கௌரவ சிறப்பு ஆலோசகர்
தவிசாளர், இலங்கா சித்தவைத்திய ஆராய்ச்சி மன்றம்

வைத்தியாச்சாரிணி. பா. இராதாதேவி — முகாமைப்பணிப்பாளர் சி. வை. கூ. சங்கம்

திரு. த. ந. இராஜா — கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்

உள்ளூர் மூலவளங்களையும், மூலிகைவளங்களையும், மூளைவளங்களையும் பயன்படுத்தி சித்த மருந்து உற்பத்தியில் தன்னிறைவு காணும் இலக்கினை நோக்கி சித்த வைத்தியக் கூட்டுறவுச் சங்கம் உழைத்து வருகிறது. சித்தா சுகாதார சேவையை வளர்ப்பதற்காக மாதாந்தம் கருத்தரங்குகளை நடாத்திவருகிறோம். சித்த வைத்தியர்களையும், அரசாங்க சித்தவைத்திய அதிகாரிகளையும் அழைத்து சித்த வைத்திய கலந்துரையாடல்களை நடாத்துகிறோம். மூலிகை வளர்ப்பினை ஊக்குவித்துவருகிறோம். சங்கத்தின் கௌரவ சிறப்பு ஆலோசகர் வைத்திய பேரறிஞர் க. பாலசுப்பிரமணியம் அவர்களின் ஆதரவுடனும், உதவியுடனும் காலத்திற்கு ஏற்ற இலகுவாக பாவிக்கக்கூடிய புதிய மருந்துகளை அறிமுகப்படுத்திவருகிறோம். எமது பொருளாதார வளத்திணை கட்டியெழுப்பி வருகிறோம். தமிழ்மக்களின் அமோக ஆதரவுடன் சங்கம் வளர்ச்சி பெற்று வருவதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். இலங்கையில் சித்த மருத்துவ வளர்ச்சிப்பணிகளில் முன்னணிவகிப்பது சித்த வைத்தியக் கூட்டுறவுச் சங்கம்.

நா. கணேசன்
செயலாளர்

# பொருளடக்கம்


வாழ்த்துச் செய்தி
Greeting Message
நூல்முகம்
சித்த மருந்தியல்
சித்த மருத்துவ கூட்டுறவுச் சங்கம்


## மருந்துகள் — குளிகைகள்


1. சிறுவர் கோரோசனைக் குளிகை
2. சின்னச் சிவப்புக் குளிகை
3. சுவாச குடோரிக் குளிகை
4. பால சஞ்சீவி குளிகை
5. புன்னை வேர்க் குளிகை
6. கபாட குளிகை
7. கிருமிக் குளிகை
8. சிவன் குளிகை
9. காக்கணவன் கோரோசனை குளிகை
10. வாதரட்சதன் குளிகை
11. உள்ளிக் குளிகை
12. பெரிய கோரோசனை குளிகை
13. இராமபாணக் குளிகை
14. சந்திரோதய குளிகை
15. சந்திராதிக் குளிகை
16. வாதாரிக் குளிகை
17. மகாஏலாதிக் குளிகை
18. விட்டுணு சக்கரக்குளிகை
19. தக்காளிச்சாற்றுக் கோரோசனை குளிகை
20. பெரிய சிவப்பு குளிகை
21. பூக்குளிகை
22. பெரிய மூச்சுக் குளிகை
23. மிருத்தியாதிக் குளிகை
24. அபானவாய்வுக் குளிகை


## சூரணங்கள்


1. சுக்கு சூரணம்
2. தாளிசாதி சூரணம்
3. கொத்தமல்லி சூரணம்
4. நிலபாவல் சூரணம்
5. முடக்கு சூரணம்
6. கந்தக ரசாயனம்
7. பெருங்காய சூரணம்
8. சாராய ஊறல் சூரணம்
9. சம்பாதிச் சூரணம்
10. சிந்தாமணித் தூள்
11. தாளிசபத்திரி சூரணம்
12. பறங்கிக்கிழங்கு சூரணம்
13. அமுக்கிராய் சூரணம்
14. அட்ட சூரணம்
15. மதுமேக சூரணம்
16. திரிபலாதி சூரணம்
17. நிலவேம்பு சூரணம்
18. சிவகரந்தைச் சூரணம்
19. சுகபேதி தூள்
20. களாச் சூரணம்
21. மாதாளம் ஓட்டுச் சூரணம்
22. மஞ்சள் பற்பம்


## லேகியங்கள்


1. அமுக்கிராய் லேகியம்
2. நீற்றுக்காய் லேகியம்
3. நெல்லிக்காய் லேகியம்
4. மதனகாம லேகியம்
5. தேற்றாவிதை லேகியம்


## பாகு


1. இஞ்சிப்பாகு
2. உள்ளிப்பாகு

## நீறு

1. குமரி பற்பம்
2. மதிகாந்த பற்பம்
3. கந்தக பற்பம்
4. பெரிய கறுப்புத் தூள்
5. மாயாக்காய் பற்பம்
6. சங்கு பற்பம்
7. கற்பூர சலாசத்து பற்பம்
8. பலகரை பற்பம்
9. ஆமை ஓட்டு பற்பம்
10. சிங்கி பற்பம்

## செந்தூரம்

1. அயச் செந்தூரம்
2. அயகாந்த செந்தூரம்
3. அன்ன பேதிச் செந்தூரம்
4. ஆறுமுக செந்தூரம்
5. காந்த செந்தூரம்
6. படிகலிங்க செந்தூரம்
7. இலிங்க செந்தூரம்
8. பூங்காவி செந்தூரம்
9. சண்டமாருத செந்தூரம்
10. மண்டூர செந்தூரம்

## காடிகள்

1. தாமரைக் காடி
2. சூரத்தாமரைக்காடி
3. இலாமிச்சுக்காடி
4. சந்தனக்காடி
5. சாறணைக்காடி
6. நன்னாரிக்காடி
7. அயக்காடி
8. திரிபலைக்காடி
9. கோசலக்காடி
10. திப்பிலிக்காடி
11. ஊமத்தைக்காடி
12. சிற்றமட்டிக்காடி
13. கிட்டக்காடி
14. கோரைக்காடி
15. ஆடாதோடைக்காடி
16. சீரகக்காடி
17. மருதம்பட்டைக்காடி
18. சிந்திற்காடி
19. அமுக்கிராய்காடி
20. அசோகம்பட்டைக்காடி
21. வேப்பம்பட்டைக்காடி
22. முந்திரிகாடி
23. தசமூலக்காடி
24. அத்திக்காடி
25. நாவற்பட்டைக்காடி
26. கற்பூரத் திராவகம்
27. கடுக்காய்காடி
28. கருங்காலிக்காடி
29. நெல்லிக்காய்காடி
30. முடக்கற்றான்காடி
31. பனங்கள்ளுக்காடி
32. தென்னங்கள்ளுக்காடி

## பாணி

1. ஆடாதோடைப் பாணி
2. அதிமதுரப் பாணி
3. சித்த சிவாமிர்தப் பாணி

## மருத்தெண்ணெய்கள்

1. பீநச எண்ணெய்
2. மெழுகு எண்ணெய்
3. வாதநாச எண்ணெய்
4. நீலியாதி எண்ணெய்
5. பொன்னாங்காணி எண்ணெய்
6. கரப்பான் எண்ணெய்
7. கிரந்தி எண்ணெய்
8. பச்சை எண்ணெய்
9. சிரங்கு எண்ணெய்
10. அமிர்த சந்தனாதி எண்ணெய்
11. தாளங்காய் எண்ணெய்
12. நெல்லிக்காய் எண்ணெய்
13. இயங்கம் வேர் எண்ணெய்
14. வெற்றிலைச்சாற்று எண்ணெய்
15. வேலம்பட்டை எண்ணெய்
16. மஞ்சள் எண்ணெய்

# குளிகைகள்

மூலிகைச் சரக்குகளை காயவைத்து இடித்து அரித்து வைத்துக்கொள்ள வேண்டும். பிசின் போன்ற சரக்குகளையும், பழங்களையும், குங்குமப்பூ, கோரோசனை, கஸ்தூரி, புனுகு, சவ்வாது, பச்சைக் கற்பூரம் போன்றவற்றை அப்படியே சேர்த்தல் வேண்டும். லோகங்களை முதலில் அரைக்க வேண்டும். பின்னர் கற்சரக்குகளை சேர்க்க வேண்டும். அரைத்து முடியும் பருவத்தில் கஸ்தூரி முதலிய ஜீவ சத்துள்ள பதார்த்தங்களைச் சேர்க்க வேண்டும். குளிகைகளை அரைப்பதற்கு மூலிகைச் சாறுகள், கியாழங்கள், முலைப்பால், நெய், தேன், இளநீர் முதலியவை பயன்படுத்தப் படுகின்றன. இவ்வாறு அரைக்கும் பொழுது, அரைக்கும் நேரம் குறிக்கப்பட்டிருந்தாலும், மருந்து வீரியமேறி அம்மியில் ஒட்டாத பருவம் வரும்வரை அரைக்க வேண்டும். அரைக்கப்பட்ட மருந்து கடுகளவு, சிறு பயறளவு, மிளகளவு, உழுந்தளவு, குன்றியளவு, தூதுளங்காயளவு, இலந்தை விதையளவு, சிறு சுண்டைக்காயளவு பிரமாணங்களில் உருட்டி நிழலில் உலர்த்தி நன்றாக காய்ந்த பின்னர் காற்றுப்புகாது பத்திரப்படுத்த வேண்டும்.

## 1. சிறுவர் கோரோசனைக் குளிகை

| | | | |
|---|---|---|---|
| கோரோசனை | அக்கரா | திப்பிலி | மதுரம் |
| கோட்டம் | இந்துப்பு | சுக்கு | ஏலம் |
| மாயாக்காய் | கொத்தமல்லி | தக்கோலம் | சிறுதேக்கு |
| சாத்திரபேதி | வெற்றிலைக்காம்பு | மாம்பித்து | மாதுளம்பூ |
| தூதுவளை வேர் | சோம்பு | சந்தனம் | மஞ்சிட்டி |

வகை — 10 கிறாம்

அரைப்பு — ஆடாதோடைவேர்ச்சாறு மூன்று நாள்

அளவு — பயறளவு, 1—2 குளிகை

குடிநீர் — இஞ்சிச்சாறு, தேன், முலைப்பால், கற்பூரவள்ளிச் சாறு, துளசிச்சாறு, கற்கண்டு.

தீரும் நோய்கள் — சிறுவர் சளி, முட்டு, இருமல் முதலிய கபரோகங்கள், கிரந்தி, அவியல், மாந்தம், வயிற்றுவலி, காய்ச்சல் தீரும்.

## 2. சின்னச்சிவப்புக் குளிகை

| | | | |
|---|---|---|---|
| கோட்டம் | கராம்பு | நாவி | ஓமம் |
| லிங்கம் | நற்சீரகம் | மிளகு | சித்தரத்தை |
| வசம்பு | பொரிகாரம் | | |

வகை—10 கிறாம்

அரைப்பு — இஞ்சிச்சாறு மூன்றுநாள்

அளவு — மிளகளவு, 1–3 குளிகை

குடிநீர் — இஞ்சிச்சாறு, தேன், முலைப்பால், வெற்றிலைச்சாறு

தீரும் நோய்கள் — சளி, முட்டு, இருமல், தொய்வு, சளிச்சுரம், நெஞ்சடைப்பு, வாயு, வெப்பு, இழுப்பு, குத்து, மாந்தக்குற்றம் தீரும்.

## 3. சுவாச குடோரிக் குளிகை

வெள்ளெருக்கம் பூ      மிளகு      வகை—20 கிறாம்

அரைப்பு — தாளிசபத்திரி, சித்தரத்தை குடிநீர். மூன்று நாள்

அளவு — தூதுவளம் பழம் அளவு 1-2 குளிகை

குடிநீர் — வெந்நீர், துளசிச்சாறு, தேன், வெற்றிலைச்சாறு, கியாழம்.

தீரும் நோய்கள் — சளி, முட்டு, தொய்வு, இழுப்பு தீரும்.

## 4. பாலசஞ்சீவிக் குளிகை

| | | | |
|---|---|---|---|
| சுக்கு | லிங்கம் | கராம்பு | திற்பலி |
| வெண்காரம் | ஓமம் | மிளகு | |

வகை—20 கிறாம்

அரைப்பு — தேசிப்புளி

அளவு — குன்றியளவு 1-3 குளிகை

குடிநீர் — இஞ்சிச்சாறு, வெற்றிலைச்சாறு, துளசிச்சாறு. கற்பூரவள்ளிச்சாறு, தேன்.

தீரும் நோய்கள் — சளி, முட்டு, தொய்வு, இருமல், தொண்டைக்கட்டு, காய்ச்சல், மாந்தம். ஐயவெப்பு, கோழை, சிறுவர் குடற்புழுக்கள், கிருமி குற்றம் தீரும்.

## 5. புன்னைவேர்க் குளிகை

| | | | |
|---|---|---|---|
| கோட்டம் | திப்பிலி | சுக்கு | கோரை |
| இந்துப்பு | காந்தம் | சினாக்காரம் | சந்தனம் |
| உள்ளி | கருஞ்சீரகம் | மிளகு | லிங்கம் |

வகை—10 கிறாம்

அரைப்பு — புன்னைவேர்ப் பட்டைச் சாறு

அளவு — தூதுளங்காயளவு 1-2 குளிகை

குடிநீர் — இஞ்சிச்சாறு, தேன், முலைப்பால், வெந்நீர், கியாழம்.

தீரும் நோய்கள் — சுரம், விக்கல், வலி, சத்தி. சளி, சுவாதம், உட்குத்து, பிறவிச்சு, பிடரிவலி தீரும்.

## 6. கபாடக்குளிகை

| | | | |
|---|---|---|---|
| சாதிக்காய் | சாதிபத்திரி | பெருங்காயம் | நற்சீரகம் |
| அதிவிடயம் | கராம்பு | மாயாக்காய் | சாத்திரபேதி |
| வெந்தயம் | கழற்சிவித்து | குறாசாணி | சித்திரமூலம் |
| கோரைக்கிழங்கு | | | |

வகை—20 கிறாம்

அரைப்பு — மாதுளம் ஓட்டுச்சாறு

அளவு — தூதுளம் காயளவு 1-2 குளிகை

குடிநீர் — தேன், வாழைப்பூச்சாறு, கியாழம்.

தீரும் நோய்கள் — கிரகணிநோய், உண்டவுடன் மலம் கழித்தல், கழிச்சல், குடற் பலவீனம், சீதக்கழிச்சல், இரத்தக்கழிச்சல், வயிற்றுக்கடுப்பு, வயிற்றுளைவு தீரும்.

## 7. கிருமிக்குளிகை

கடுக்காய்தோல்
வாய்விடங்கம்
உள்ளி
குப்பைமேனி வேர்
ஆடுதீண்டாப்பாளை இலை
கடுகுரோகணி
லிங்கம்
கிருமிசத்துரு
மாதுளம்வேர்ப்பட்டை
நெல்லிவற்றல்
வசம்பு
வெண்காயம்
சுக்கு
ஆடுதீண்டாப்பாளைவேர்
மிளகு
நற்சீரகம்
தான்றிக்காய்
திற்பலி
மாம்பருப்பு
ஆடுதீண்டாப்பாளைவிதை
காசுக்கட்டி
கருஞ்சீரகம்

வகை—10 கிறாம்

அரைப்பு — மாதுளம்வேர்ப் பட்டைச்சாறு

அளவு — குன்றியளவு 1-3 குளிகை

குடிநீர் — துளசி, பனங்கட்டி, கியாழம்.

தீரும் நோய்கள் — குடற்புழுக்கள், கிருமிகள் இவற்றினால் ஏற்படும் மாந்தம், மாந்தம், கழிச்சல், சத்தி, பிரட்டு, மயக்கம், கிருமிவெப்பு.

## 8. சிவன் குளிகை

நெல்லிக்கெந்தகம்
ஊமத்தைவிதை
வாளம்
மிளகு
வெண்குன்றிவிதை
குறாசாணி ஓமம்
வெண்காரம்
திப்பலி
கடுக்காய்தோல்
இரசம்

வகை—10 கிறாம்

அரைப்பு — தேசிப்புளி அல்லது இஞ்சிச்சாறு

அளவு — குன்றியளவு 1-4 குளிகை

குடிநீர் — முலைப்பால், இஞ்சிச்சாறு, வெந்நீர், தேன், வேப்பநெய், கியாழம்.

தீரும்நோய்கள் — சகலரோகங்களுக்கும் தகுந்த அருந்து நீருடன் கொடுக்கலாம். பேதியாகவும் பாவிக்கலாம். சுரம், வலி, வாயு, பக்கசூலை, கொழுவல், நெடுமூச்சு, நெஞ்சுக்குத்து, பெருவயிறு, சன்னி தீரும்.

## 9. காக்கணவன் கோரோசனைக் குளிகை

கோட்டம்
நற்சீரகம்
மாசிக்காய்
கருஞ்சீரகம்
நேர்வாளம்
சாத்திரபேதி
கோரோசனை
திற்பலி
வசம்பு
அக்கரா

வகை—10 கிறாம்

அரைப்பு — கறுத்தப்பூக்கொடிச் சாறு

அளவு — பயறளவு 1-3 குளிகை

குடிநீர் — கற்பூரவள்ளி, துளசி, வெற்றிலை, முலைப்பால்.

தீரும்நோய்கள் — சிறுவர் கிரந்தி, அவியல், கரப்பன், சளி, மலச்சிக்கல், காய்ச்சல், செங்கிரந்தி, கருங்கிரந்தி, மூச்சு, முட்டு தீரும்.

## 10. வாதராட்சதன் குளிகை

| | | | |
|---|---|---|---|
| இரசம் | கருஞ்சீரகம் | திற்பலி | மனோசிலை |
| சுக்கு | நற்சீரகம் | உள்ளி | நிர்விடம் |
| கடுக்காய் | துரிசு | நாபி | காந்தம் |
| வசம்பு | சீனாக்காரம் | இருவி | மிளகு |
| இந்துப்பு | லிங்கம் | வெண்காரம் | கந்தகம் |
| குக்கில் | கடுகுரோகிணி | சாம்பிராணி | துத்தம் |
| நேர்வாளம் | | | |

வகை—10 கிறாம்

அரைப்பு — முருக்கம்பட்டைச் சாறு, இஞ்சிச்சாறு 14 நாள்

அளவு — பயறளவு 1-2 குளிகை

குடிநீர் — உள்ளிச்சாறு, இஞ்சிச்சாறு, கியாழம்.

தீரும்நோய்கள் — வாதநோய்கள் 84, குத்துளைவு, வீக்கம், வாய்வுரோகம் 64, குன்மம், நோவு.

## 11. உள்ளிக் குளிகை

| | | | |
|---|---|---|---|
| உள்ளி—1 கிலோ | இஞ்சி | துதகுப்பை | கூனகநீறு |
| அக்கரா | கடுகுரோகணி | சிற்றரத்தை | இந்துப்பு |
| நற்சீரகம் | சிற்றேலம் | வசுவாசி | அதிமதுரம் |
| கடுக்காய் | கருஞ்சீரகம் | வெந்தயம் | கராம்பு |
| பொரிகாரம் | ஓமம் | கொத்தமல்லி | பெருங்காயம் |
| சன்னிநாயகன் | வெளுத்தல் பிசின் | சாரணை | |

வகை – 60 கிறாம்

அரைப்பு — உத்தமாகாணிச்சாறு

அளவு — தூதுவளங்காய் 1-3 குளிகை

குடிநீர் — வெந்நீர், இஞ்சிச்சாறு, கியாழம்.

தீரும்நோய்கள் — வயிற்றுக்குத்து, வாய்வு, வயிற்றுப்பொருமல், பரிணாமசூலை, அன்ன திரவசூலை, அசீரணம், மாந்தம், நெஞ்சடைப்பு, நெஞ்சுக்குத்து, கழிச்சல் தீரும்.

## 12. பெரிய கோரோசனைக் குளிகை

| | | | |
|---|---|---|---|
| கோரோசனை | அக்கரா | பச்சைக்கற்பூரம் | சாதிக்காய் |
| ஏலம் | இரசசெந்தூரம் | கராம்பு | கோட்டம் |

வகை—10 கிறாம்

அரைப்பு — சந்தனம், செண்பகப்பூ, இலவங்கப்பட்டை.

அளவு — பயறளவு 1-3 குளிகை

குடிநீர் — இஞ்சி, உள்ளி, கற்பூரவள்ளி, முலைப்பால், தேன்.

தீரும்நோய்கள் — மண்டைக்குத்து, நீர்த்தோடம், மயக்கம், வாந்தி, சளி, முட்டு, இருமல், கபசுரம்.

## 13. இராமபாணக் குளிகை

இரசம் நாபி சாதிக்காய் மிளகு
இலவங்கம் கெந்தகம் வகை—10 கிறாம்

அரைப்பு — சிந்தூரச்சாறு

அளவு — மிளகளவு 1-4 குளிகை 3 நேரம்.

குடிநீர் — கியாழம். முலைப்பால், இஞ்சிச்சாறு.

தீரும்நோய்கள் — முறைக்காய்ச்சல், தொடர்சுரம், கிருமிசுரம், வேறுசுரங்கள் எல்லாம் தீரும்.

## 14. சந்திரோதயகுளிகை

மான்கொம்பு தேற்றாவிதை சந்தனம்
உருத்திராக்கம் அதிமதுரம் வில்வவேர்
சிற்றரத்தை அதிவிடயம்
பேரரத்தை சாதிக்காய் வகை—200 கிறாம்
கோரைக்கிழங்கு சாதிலிங்கம்
வகை—5 கிறாம்

அரைப்பு — சந்தனம் வில்வவேர் கியாழம் 1 நாள்

அளவு — பயறளவு 1-2 குளிகை

தீரும்நோய்கள் — குழந்தைகள் அக்கரம், இருமல், தொய்வு, வயிற்றுளைவு, வயிற்றுக் கடுப்பு, சுவாதம், மூச்சு நீங்கும், குழந்தைகள், இளைஞர், விருத்தர் எல்லோருக்கும் உரிய மருந்து.

## 15. சந்திராதி குளிகை

அதிவிடயம் சாதிக்காய் அதிமதுரம் சுக்கு
தேவதாரம் கராம்பு சீரகம் அரத்தை
கெருடபச்சை விளாலரிசி அக்கரா கருவாப்பட்டை
வால்மிளகு ஏலம் வகை—5 கிறாம்
நத்தைச்சூரிவித்து — 20 கிறாம் இலாமிச்சவேர் — 10 கிவாம்
நன்னாரிவேர் — 10 கிறாம்

அரைப்பு — சீந்திற்சாறு 3 மணி நேரம், பொன்னாங்காணிச்சாறு 3 மணிநேரம், ஓரிதழ் தாமரை இலைச் சாறு 3 மணிநேரம் அரைக்க வேண்டும்,

அளவு — குன்றியளவு 1-2

குடிநீர் — தாய்ப்பால்

தீரும்நோய்கள் — இருமல், ஈளை, அக்கரசுரம், கழிச்சல், கோழை, கபம் நீங்கி வீரியம் உண்டாகும்.

## 16. வாதாரிக்குளிகை

இரசம் — 5 கிறாம்
லிங்கம் — 15 கிறாம்
இரும்புப்பொடி — 40 கிறாம்
கெந்தகம் — 10 கிறாம்
காந்தம் — 20 கிறாம்

அரைப்பு — கையாந்தகரைச்சாறு 6 நாள்

அளவு — குன்றியளவு 1 - 2

குடிநீர் — இஞ்சி, தேன்.

தீரும்நோய்கள் — வாதநோய்கள், மந்தாரகாசம், சூலை, குட்டம், குன்மம், மகோதரம், கோழை, கயம், உட்குத்து, பிறவீச்சு, பெருவியாதி, காமாலை, நாட்பட்டசுரம், குமரகண்டவலி, பீலிகை, மந்தம், மலசலவடைப்பு புடையன்கடி, வண்டுகடி, நாககடி, எலிக்கடி, புலிமுகச் சிலந்திகடி, இருமல், மணக்கும்சளி, வலி - 12, அண்டவாதம், கண்டமாலை, வாயு, கோதாரிக்கழிச்சல், உருத்திர வாயு, முறைச்சுரம் நீங்கும். பிள்ளைபெற வருந்துபவர் பிள்ளை பெறுவர்

## 17. மகாஏலாதிக் குளிகை

| | | | |
|---|---|---|---|
| ஏலம் | வசுவாசி | சுக்கு | இலவங்கப்பட்டை |
| சிறுநாகம்பு | திற்பலி | இலாமிச்சு | நன்னாரி |
| மிளகு | வெட்டிவேர் | முந்திரிகை | அரத்தை |
| அதிவிடயம் | கற்கடகசிங்கி | திற்பலிமூலம் | நற்சீரகம் |
| மாதுளம் ஓடு | சவ்வியம் | கருஞ்சீரகம் | கௌரி |
| மதுரம் | ஓமம் | பொன்னரிதாரம் | தாளிசபத்திரி |
| குருசாணி (ஓமம்) | இரசம் | நெல்லிக்காய் | கண்டதிற்பலி |
| சந்தனம் | தான்றிக்காய் | கோரைக்கிழங்கு | வால்மிளகு |
| கடுக்காய் | அக்கரா | கஸ்தூரி | லிங்கம் |
| சாதிக்காய் | சீந்திற்சக்கரை | மனோசிலை | சாதிபத்திரி |
| கோரோசனை | கந்தகம் | இலவங்கம் | சாம்பிராணிப்பூ |
| தாம்பிரசெந்தூரம் | அசுவகெந்தி | காந்தசெந்தூரம் | கூகைநீறு |
| தனியா | வங்கசெந்தூரம் | கற்கண்டு | புனுகு |
| பேரீந்து | அப்பிரகசெந்தூரம் | பொரிகாரம் | குங்குமப்பூ |
| கருநாபி | இரசசெந்தூரம் | | வகை—5 கிறாம் |

அரைப்பு — இஞ்சிச்சாறு, பூமாதாளம்பூச்சாறு, மாதாளம் பழச்சாறு, வில்வப்பூப்பன்னீர் தனித்தனி இரண்டு நாள்.

அளவு — பயறளவு 2-4 குளிகைகள்

குடிநீர் — தாய்ப்பால், தேன், கியாளம், பூநாகத்தூள், உள்ளித்தைலம், திப்பலித்தூள், சாரணைக்காஷாயம்.

தீரும்நோய்கள் — சுவாதம், சன்னி, சீதச்சுரம், மேல்மூச்சு, சளிச்சுரம், இருமல், 13 சன்னி, சயரோகம், கிராணி, அதிசாரம், மூலம், சர்மரோகம் தீரும்.

## 18. விட்டுணு சக்கரக் குளிகை

| | | | |
|---|---|---|---|
| கல்லரிதாரம் | மிளகு | இந்துப்பு | அரிதாரம் |
| ஓமம் | கோட்டம் | பொரிகாரம் | வசுவாசி |
| லிங்கம் | கராம்பு | கல்மதம் | துத்தம் |
| கருஞ்சீரகம் | நாபி | துரிசு | நற்சீரகம் |
| திருநீறு | நிர்விடம் | திப்பிலி | சுக்கு |
| திரிபலை | இரசம் | மனோசிலை | மதுரம் |
| வால்மிளகு | சீனாக்காரம் | தேவதாரு | வசம்பு |
| சாதிக்காய் | | | வகை—5 கிறாம் |

அரைப்பு — இஞ்சிச்சாறு, கஞ்சாங்கோரைச்சாறு ஒவ்வொருநாள்

அளவு — பயறுப்பிரமாணம் 1-3 குளிகை.

குடிநீர் — வேப்பெண்ணை, உள்ளித்தைலம், தாய்ப்பால், செவ்விளநீர், கியாழம், இஞ்சிச்சாறு, கற்கண்டு நோய்க்கேற்றவாறு கலந்து கொடுக்கவும்.

திரும்நோய்கள் — தலை நடுக்கம், அதிவெப்பு, விழிமருட்டல், மொழிதடுமாறல், பிதற்றல், தொய்வு, நெஞ்சடைப்பு, கண்ணிருட்டு, இளைப்பு, மூக்கு மலருதல், மேல்மூச்சு, மூச்சுமுட்டு, கழிச்சல், சேற்பன அடைப்பு, புடவை பாய் கிழித்தல், நாத்தடிப்பு, தாகம், வெள் ளோக்காளம், வாத அழலை, எரிவு, மலம்தீய்தல்' 18 சந்நி, 80 வாதங்களும், 20 சேற்பனம், தினவெப்பு.

## 19. தக்காளிச்சாற்றுக் கோரோசனைக் குளிகை

| | | | |
|---|---|---|---|
| கோரோசனை | வசம்பு | பச்சைக்கற்பூரம் | சாத்திரபேதி |
| உள்ளி | திரிகடுகு | ஓமம் | குங்குமப்பூ |
| லிங்கம் | அரத்தை | சாதிக்காய் | வகை—5 கிறாம் |
| பூரம்—$1\frac{1}{2}$ கிராம் | | | |

அரைப்பு — மணித்தக்காளிச்சாறு, தாய்ப்பால், வெற்றிலைச்சாறு.

அளவு — மிளகுப்பிரமாணம் 1·2 மாத்திரை

குடிநீர் — தாய்ப்பால், கற்பூரவள்ளிச்சாறு, வெற்றிலைச்சாறு, தேன்.

திரும்நோய்கள் — கிரந்தி, தொய்வு, முட்டு, மூச்சு, இருமல் தீரும்.

## 20. பெரியசிவப்புக் குளிகை

| | | | |
|---|---|---|---|
| மதுரம் | மாயாக்காய் | சீனாக்காரம் | பொன்னரிதாரம் |
| பொரிகாரம் | உள்ளி | கருஞ்சீரகம் | திப்பிலி |
| காந்தம் | நற்சீரகம் | காவிமண் | கெருடபச்சை |
| சுக்கு | சிறுதேக்கு | ஏலம் | இந்துப்பு |
| மனோசிலை | வசுவாசி | கண்டதிப்பலி | கோட்டம் |
| துரிசு | கராம்பு | துத்தம் | கார்புகாஅரிசி |
| சாதிக்காய் | காயம் | பொன்நிமிளை | வெண்காரம் |
| கோரோசனை | வெள்ளைப்பாஷாணம் | கடுகு | கடுகுரோகிணி |
| நாபி | வெண்நிமிளை | அக்கரா | வகை—5 கிறாம் |

செஞ்சந்தணம்—சாதிலிங்கம் வகை 10 கிறாம்

அரைப்பு — தோடம்பழச்சாறு, இஞ்சிச்சாறு, கருப்பஞ்சாறு, தாய்ப்பால்.

அளவு — பயறளவு 2-4 மாத்திரை

குடிநீர் — இஞ்சி, உள்ளி, முருங்கைப்பட்டைச்சாறு, வெற்றிலை, ஆடாதோடை, வெங்காயச்சாறு, தேன், கியாழம், தாய்ப்பால்.

திரும்நோய்கள் — நெஞ்சுக்குத்து, தொய்வு, இருமல், காய்ச்சல், புலவுாயு, சன்னி, முறைக்காய்ச்சல் திரும்.

## 21. பூக்குளிகை

| | | | |
|---|---|---|---|
| அதிவிடயம் | சாதிக்காய் | இலவங்கப்பட்டை | காந்தம் |
| ஏலம் | குருசாணி | நெல்லிவற்றல் | கராம்பு |
| ஓமம் | களிப்பாக்கு | காசுக்கட்டி | வசுவாசி |
| நற்சீரகம் | வெள்ளைகுந்திருக்கம் | கருஞ்சீரகம் | கோட்டம் |
| | | | வகை—10 கிறாம் |

அரைப்பு — வாழைப்பூச்சாறு
அளவு — குன்றியளவு 1-2 குளிகை
குடிநீர் — வெந்நீர், தேன், வாழைப்பூச்சாறு.
தீரும்நோய்கள் — பொருமிக்கழிதல், இரத்தம்கழிதல், வயிற்றுக்கடுப்பு, சீதக்கழிச்சல் தீரும்.

## 22. பெரியமூச்சுக் குளிகை

| | | | |
|---|---|---|---|
| மனோசிலை | வெண்காரம் | இரசம் | துத்தம் |
| துரிசு | சாதிலிங்கம் | பொன்னரிதாரம் | கெந்தகம் |
| நாபி—5 கிறாம் | காந்தம் | | வகை—10 கிறாம் |

அரைப்பு — பேய்பீர்க்கிலைச்சாறு, கோசலம், எலுமிச்சம்புளி, இஞ்சிச்சாறு ஒவ்வொரு நாள் ஒருசாமம்.
அளவு — பயறளவு 1-2 குளிகை.
குடிநீர் — இஞ்சிச்சாறு, கியாழம், தேன், தாய்ப்பால், முருங்கைப்பட்டை, தயிர் வேளை, சன்னிநாயகன்சாறு.
தீரும்நோய்கள் — வாதம் - 84, கபம் - 20, சந்நி - 13, அனைத்து வெப்பநோய், மூச்சு, கோழை, சிலேற்பனம், இருமல், குத்து கொழுவல், மேல்மூச்சு, மூச்சுமுட்டுடன் காய்ச்சல், வாந்தி, கழிச்சல், மாந்தம், சளி, கசம் தீரும்.

## 23. மிருத்தியாதிகுளிகை

| | | | |
|---|---|---|---|
| கோட்டம் | சுக்கு | பேரீந்து | நற்சீரகம் |
| மிளகு | சாத்திரபேதி | வசுவாசி | கோரைக்கிழங்கு |
| பச்சைக்கற்பூரம் | ஏலம் | சந்தனம் | கடுகுரோகிணி |
| இவலங்கம்பட்டை | கஸ்தூரிமஞ்சல் | கராம்பு | கொத்தமல்லி |
| முந்திரிகைக்கனி | திப்பலி | மதுரம் | வகை—10 கிறாம் |

அரைப்பு — செவ்விளநீர்
அளவு — குன்றியளவு 1-3 குளிகை
குடிநீர் — இஞ்சிச்சாறு, தாய்ப்பால், தேன்.
தீரும்நோய்கள் — சந்நி, உழலை, அதிதாகம், பித்தசுரம், பெருங்கழிச்சல், வாந்தி, உள்வெப்பு, உடல் வெதும்பல் தீரும்.

## 24. அபானவாயுக்குளிகை

| | | | |
|---|---|---|---|
| நற்சீரகம் | உள்ளி | அக்கரா | கருஞ்சீரகம் |
| கோட்டம் | பெருங்காயம் | ஓமம் | மிளகு |
| பூவரசம்பிஞ்சு | வசம்பு | திப்பிலி | வகை—10 கிறாம் |

அரைப்பு — நொச்சிச்சாறு, வேலிப்பருத்திச்சாறு.
அளவு — மிளகளவு 1-3 குளிகை
குடிநீர் — நொச்சிச்சாறு, மிளகரணைச்சாறு.
தீரும்நோய் — அபானவாய்வு.

# சூரணங்கள்

மூலிகைச் சரக்குகளை காயவைத்து உலர்த்தி இடித்து சூரணித்து துணியில் வடிகட்டி எடுத்துக்கொள்வதாகும். சூரணங்களில் சேரும் கற்சரக்குகள் குழி அம்மியில் இட்டு அரைக்கப்பட்டு சூரணத் தூளையும் கொஞ்சம் கொஞ்சமாக அத்தோடு சேர்த்தரைக்கவேண்டும், கனிவகைகளை தனியாக குழி அம்மியில் இட்டு அரைத்து, நன்றாக அரைபட்டபின்னர் இடிக்கப்பட்டதூளை சிறுது சிறிதாக சேர்க்கவும். சில சூரணங்கள் பசுப்பாலில் பிசைந்து வேடுகட்டி அவித்து, உலர்த்தி பின்னர் இடித்து அரித்து எடுத்துக் கொள்வதுமுண்டு. வேறு சில சூரணங்களை சாராயத்தில் பிசைந்து ஊறவைத்து உலர்ந்தபின்னர் மீண்டும் இடித்து அரித்து எடுத்துக்கொள்வதும் உண்டு. மூலிகைச்சரக்குகளேயாயினும் மிகவும் நுண்மையாக இடித்து அம்மியில் அரைத்து எடுத்துக்கொள்ளும் போது அவை பொடியாக இருப்பதால் அவற்றை பற்பம் என்று அழைப்பதும் உண்டு.

## 1. சுக்குச் சூரணம்

திப்பிலி
தான்றிக்காய்
நற்சீரகம்
மிளகு
கடுக்காய்
நெல்லிவற்றல்
வகை—50 கிறாம்
சுக்கு — 1 கிலோ

அளவு — 10—20 அரிசி எடை

குடிநீர்— தேன், வெந்நீர், சீனி, பனங்கட்டி, கியாழம்.

தீரும் நோய்கள் — வாயு, குத்து, சூலை, வலி, வேதனை, வயிற்றுப்பொருமல், ஏப்பம், அசீரணம் தீரும்

## 2. தாளிசாதி சூரணம்

ஏலம்
மிளகு
மூங்கிலுப்பு
தாளிசபத்திரி
சுக்கு
மதுரம்
இலவங்கப்பட்டை
திற்பலி
வகை—100 கிறாம்
சீனி —800 கிறாம்

அளவு — 10—20 குன்றி எடை

குடிநீர்— தேன், வெந்நீர், கற்கண்டு

தீரும் நோய்கள் — இருமல், இளைப்பு, சுரந்தம்மல், நெஞ்சுநோ, தும்மல், பீனிசம், பசியின்மை, மூக்குநீர்ப்பாய்ச்சல், கோழை, இருதயபலவீனம் தீரும்.

## 3. கொத்தமல்லிச் சூரணம்

மல்லி—1200 கிறாம்
சோம்பு
மதுரம்
ஓமம்
சீரகம்
இலவங்கப்பட்டை
வகை 200 கிறாம்
சீனி சமன்

அளவு — 20—40 அரிசி எடை

குடிநீர்— தண்ணீர், இளநீர், தேசிப்புளி, சர்க்கரை, சீனி, பசுப்பால் தோடம்பழச்சாறு

தீரும் நோய்கள் — பித்தம் 40, உடற்சூடு, வெப்பு, தலைச்சுற்று, கண்மின்னல், மயக்கம், கைகால் எரிவு, தலைச்சூடு, பிரட்டு, ஓங்காளம், நித்திரைக்குறைவு, கால்பித்தவெடிப்பு

## 4. நிலபாவல் சூரணம்

நிலபாவல் இலை 100 கிறாம் ஓமம் மதுரம்
மிளகு விடங்கம் கடுக்காய்
சுக்கு நெல்லி, தான்றி வகை — 30 கிறாம்
சூரத்தாமரையிலை 100 கிறாம்

அளவு — 20—40 அரிசி எடை

குடிநீர்— பனங்கட்டி, வெந்நீர், தேன், கற்கண்டு, சீனி, கியாழம்

தீரும் நோய்கள் — துர்நீர், கரப்பன், அவியல், கடி, சொறி, விரணம், தேமல், மலச்சிக்கல் தீரும்

## 5. முடக்குச் சூரணம்

நற்சீரகம் அமுக்கிறாய் நிலப்பனங்கிழங்கு கோரை
நீரடிமுத்து சிற்றரத்தை சுக்கு நெல்லிக்காய்
மாயாக்காய் தான்றிக்காய் கராம்பு திற்பலிமூலம்
திப்பலி கொத்தமல்லி மதுரம் ஓமம்
கார்புகா அரிசி கருஞ்சீரகம் கோட்டம் வகை 5 கிறாம்
பறங்கிக்கிழங்கு 100 கிறாம்

அளவு — 10—20 அரிசி எடை

குடிநீர்— தேன்

தீரும் நோய்கள் — வாதம், முழங்கால் வீக்கம், வாதக்குத்துளைவு, கைகால் முடக்கு விறைப்பு தீரும்,

## 6. கந்தகரசாயனம்

கந்தகம் — 300 கிறாம் திப்பிலி மிளகு
சுக்கு கொடிவேலி நெல்லி
கடுக்காய் தான்றிக்காய் விடங்கம்
ஏலம் அரத்தை இலவங்கப்பத்திரி
கராம்பு இலவங்கப்பட்டை கண்டதிற்பலி
சிறுதேக்கு — வகை 30 கிறாம்
பறங்கிக்கிழங்கு—150 கிறாம்

அளவு — 10—30 அரிசியெடை

குடிநீர்— தேன், சீனி, வெந்நீர், நெய்

தீரும் நோய்கள் — கரப்பன், கிரந்தி, துட்டவிரணம், நாட்பட்ட அவியல்நோய், வாதநோய், துர்நீர், மூத்திரக்கடுப்பு, மேகவியாதி

## 7. பெருங்காய சூரணம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெருங்காயம் | — 100 கிறாம் | | இந்துப்பு | — 300 கிறாம் | |
| வசம்பு | — 200 | ,, | சுக்கு | — 400 | ,, |
| ஓமம் | — 500 | ,, | கடுக்காய் தோல் | — 600 | ,, |

அளவு — 250 — 500 m. g.

குடிநீர்— வெண்ணெய், சீனி, தேன்

தீரும் நோய்கள்—அசீரணம், வயிற்றுவலி, பசியின்மை, குளிர்விறைப்பு, வயிற்றுப்பொருமல் தீரும்.

## 8. சாராய ஊறல் சூரணம்

| | | | |
|---|---|---|---|
| கடுரோகணி | திப்பிலி | கடுக்காய் | கோட்டம் |
| நெல்லி | பறங்கிக்கிழங்கு | இலவங்கப்பட்டை | அக்கரா |
| ஏலம் | வசுவாசி | சாதிக்காய் | கராம்பு |
| கருஞ்சீரகம் | திற்பலிமூலம் | குறாசாணி | நற்சீரகம் |
| அதிவிடயம் | சித்தரத்தை | வால்மிளகு | மாயாக்காய் |
| மிளகு | மதுரம் | சுக்கு | தான்றிக்காய் |
| | | | வகை — 10 கிறாம் |

பழஞ்சாராயம் — 750 மி. லீ.

அளவு — 10—20 அரிசியெடை

குடிநீர்—தேன், பனங்கட்டி, வெந்நீர்

தீரும்நோய்கள்—பெற்றவள் வயிற்றுநோ, வேதனை, குடற்புண், உடல் நோ, சூதக சிக்கல் துவாலைச்சிக்கல்

## 9. சம்பாதி சூரணம்

| | | | |
|---|---|---|---|
| சுக்கு | வெட்பாலரிசி | காவிக்கல் | நாயுருவி |
| அதிமதுரம் | சந்தனம் | அத்திப்பட்டை | வில்வம்பிஞ்சு |
| மஞ்சிட்டி | மிளகு | சிறுநாகம்பூ | அதிவிடயம் |
| கோரை | மாம்பருப்பு | தாமரைப்பூ | அகில் |
| மாயாக்காய் | | | வகை—10 கிறாம் |

நாவல்பட்டை—200 கிறாம்

அளவு 10—20 அரிசியெடை

குடிநீர்— அரிசி கழுவிய தண்ணீர், வாழைப்பொத்திச்சாறு

தீரும் நோய்கள்—பெரும்பாடு, துவாலையடித்தல், இரத்தக் கழிச்சல்

## 10 சிந்தாமணித் தூள்

| | | | |
|---|---|---|---|
| நன்னாரி | கோரைக்கிழங்கு | சுக்கு | திற்பலி |
| மிளகு | மதுரம் | ஏலம் | தாதுவளை |
| நற்சீரகம் | ஓமம் | வட்டுவேர் | தேற்றாவிதை |
| சாதிக்காய் | இலவங்கம் | கண்டங்கத்தரி | கடுக்காய் |
| நெல்லிவற்றல் | தான்றிக்காய் | கருஞ்சீரகம் | இந்துப்பூ |

சூரண எடைக்கு கற்கண்டு சேர்க்கவும்

அளவு — 10—20 அரிசியெடை

குடிநீர்— தேன், வெந்நீர்

தீரும் நோய்கள்—இருமல், முட்டு, இளைப்பு, நெஞ்சுநோ, கோழை, கபம், சுவாதம், தெண்டல் குத்துளைவு, வாயு

## 11. தாளிசபத்திரி சூரணம்

| | | | |
|---|---|---|---|
| மதுரம் | சந்தனம் | கோட்டம் | கராம்பு |
| மஞ்சிட்டி | தாளிசபத்திரி | ஏலம் | சீரகம் |
| நெல்லி | சிறுநாகம்பூ | சடாமாஞ்சில் | மல்லி |

வகை—சமன்

சூரண எடைக்கு சீனிசேர்க்கவும்

அளவு — 10—20 அரிசியெடை

குடிநீர்— தேன், இஞ்சி, மாதுளம்பழம்

தீரும் நோய்கள்— பித்தம், இருமல், காமாலை, சலக்கடுப்பு, தாகம், ஈழை, வாந்தி, குன்மம், நெஞ்செரிவு தேகமெலிவு, தாதுநட்டம், மயக்கம், கண்புகைச்சல், கிரந்தி, கரப்பன்,

## 12. பறங்கிக்கிழங்குசூரணம்

| | | |
|---|---|---|
| திப்பிலி | ஓமம் | மல்லி—வகை 200 கிறாம் |
| சீரகம் | சுக்கு | பறங்கிக்கிழங்கு—1கிலோ |

அளவு — 10 அரிசியெடை

குடிநீர்— தேன், குடிநீர், சீனி, வெந்நீர்

தீரும் நோய்கள்— வாதவீக்கம், உளைவு, வலி. நோவு, வாதரோகம், அதிகமொழுமை துர்நீர், விரணங்கள்,

## 13 அமுக்கிராய் சூரணம்

| | | |
|---|---|---|
| இலவங்கப்பட்டை | சிறுநாகம்பூ | திப்பிலி |
| ஏலம் | மிளகு | |
| அமுக்கிரா—120 கிறாம் | சுக்கு | வகை—10 கிறாம் |
| சீனி—180 கிறாம் | | |

அளவு — 20—40 அரிசியெடை

குடிநீர்— பசுப்பால், தேன், நெய், வெந்நீர், சீனி, குடிநீர்

தீரும் நோய்கள்— உடல் அழற்சி, இளைப்பு, களைப்பு, மெலிவு, வாய்வு, வாதநோய்,

## 14. அட்ட சூரணம்

| | | | |
|---|---|---|---|
| கருஞ்சீரகம் | மிளகு | நற்சீரகம் | ஓமம் |
| சுக்கு | பெருங்காயம் | திற்பலி | இந்துப்பு |
| | | | வகை—100 கிறாம் |

அளவு — 250—500 மி. இ.

குடிநீர் — தேன், வெந்நீர், சீனி.

தீரும் நோய்கள் — குன்மம், அசீரணம், சூலை, வயிற்றுப்பொருமல், பசியின்மை

## 15. மதுமேக சூரணம்

| | | | |
|---|---|---|---|
| நெல்லிவற்றல் | சீந்தில் | சிறுகுறிஞ்சா இலை | ஏலம் |
| | | | வகை 100 கிறாம் |

அளவு — 1–4 தேக்கரண்டி 1 நாளைக்கு

குடிநீர் — பசுப்பால், நீர், மோர்.

தீரும் நோய்கள் — மதுமேகம், அதிமூத்திரம், மதுமேகப்பாதிப்புகள்.

## 16. திரிபலாதி சூரணம்

| | | | |
|---|---|---|---|
| கடுக்காய்தோல் | சுக்கு | தான்றிக்காய் | நற்சீரகம் |
| நெல்லிவற்றல் | | | வகை—சமன் |

அளவு — 20—40 அரிசியெடை

குடிநீர்— பனங்கட்டி, வெந்நீர், பசுநெய்

தீரும் நோய்கள்— சொறி, கடி, தேமல், தோல்நோய், வாயுசம்பந்தமான நோய்கள் கண் ரோகம் 96, ஊளைச்சதை தீரும்

## 17. நிலவேம்பு சூரணம்

| | | | |
|---|---|---|---|
| சீந்தில் | சுக்கு | மிளகு | சந்தனம் |
| கராம்பு | நிலவேம்பு | வேப்பம்பட்டை | திற்பலிமூலம் |
| கடுகுரோகணி | திற்பலி | | வகை –100 கிறாம் |

அளவு — 2—4 கிறாம்

குடிநீர்— வெந்நீர், தேன், சீனி

தீரும் நோய்கள்— முளைக்காய்ச்சல், நாட்பட்டவெப்பு, தொடர்வெப்பு, பொதுவாக எல்லா வெப்புகளும் தீரும்

## 18. சிவகரந்தைச் சூரணம்

சிவகரந்தை  நொச்சி  பொன்னாவரசு  பூனைக்கழற்சி
கண்டங்கத்தரி  அவுரி  இயங்கு  துளசி
முருக்கு  கோழியவரை

இவை இலை வகை—80 கிறாம்

கராம்பு  வசுவாசி  மதுரம்  வெண்காரம்
ஏலம்  பச்சைக்கற்பூரம்  வகை 5 கிறாம்

சீனக்கிழங்கு—500 கிறாம்  கூகைநீறு 20 கிறாம்  கடுக்காய்—200 கிறாம்
கருஞ்சீரகம் 30 கிறாம்  கார்போகரிசி—50 கிறாம்

அளவு — 1—2 கிறாம்

குடிநீர்— பசுமோர், கியாழம், பனைவெல்லம்

தீரும் நோய்கள்— கிரந்தி, கரப்பான். அவியல், சொறிவு கடி, தடிப்பு, தேமல், துர்நீர், விஷகிரந்தி முதலியன

## 19. சுகபேதித் தூள்

சூரத்தாமரையிலை — 500 கிறாம்  கடுக்காய்தோல் — 250 கிறாம்
மதுரம் — 50 கிறாம்  ரோசாமொக்கு — 50 கிறாம்
சதகுப்பை — 50 கிறாம்  காக்கணவன் — 50 கிறாம்
கடுகுரோணி — 50 கிறாம்

அளவு — ½—1 தேக்கரண்டி

குடிநீர்— பால், வெந்நீர், சீனி

தீரும்நோய்கள்—மலச்சிக்கல், மலபந்தம், மூலவாயு, தோல்வியாதி, வயிற்றுப்பொருமல் வயிற்றூதல், சிதக்கட்டு நீங்கும் மூலவியாதியுள்ளவர்கள் அடிக்கடி பாவிக்கக்கூடாது.

## 20. களாச் சூரணம்

பாம்புக்களா—120 கிறாம்  ஏலம்—20 கிறாம்  மிளகு—10 கிறாம்

அளவு — 1—2 கிறாம்

குடிநீர்— பசுப்பால், கியாழம், வெந்நீர்

தீரும் நோய்கள்— வலிப்பு, மனநோய், அதிஇரத்தமுக்கம், நித்திரையின்மை, பதற்றம், பிதற்றல் தீரும்

## 21. மாதுளம் ஒட்டுச் சூரணம்

மாதாளம் தோல்—160 கிறாம்

| | | |
|---|---|---|
| சிறுநாகம்பூ | திப்பிலி | கண்டதிற்பலி |
| மல்லி | புளிமாதாளை | கருஞ்சீரகம் |
| தாளிசபத்திரி | இந்துப்பு | வகை—80 கிறாம் |

கறுவா, ஏலம் — வகை — 20 கிறாம்  சுக்கு, மிளகு, சீரகம் — வகை — 40 கிறாம்

கறியுப்பு — வகை — 480கிறாம்

அளவு — 1—2 கிறாம்

குடிநீர்—வெந்நீர், சீனி, தேன்

தீரும் நோய்கள் — குன்மவகை—8 அசீரணம், சத்தி, கழிச்சல், அன்னத்திரவசூலை பரிணாமசூலை, புளியேப்பம், நெஞ்செரிப்பு தீரும்.

## 22. மஞ்சள் பற்பம்

| | | |
|---|---|---|
| கருஞ்சீரகம் | மஞ்சள் | குருசாணி |
| சுக்கு | ஓமம் | திற்பலிமூலம் |
| கடுகுரோகணி | மிளகு | சிற்றரத்தை |
| சராம்பு | பெருங்காயம் | நேர்வாளம் |
| கடுகு | மல்லி | வகை — 100 கிராம் |

அரைப்பு — இடித்து அரைத்து நன்றாக கலந்து வைத்துக்கொள்ளவும்.

அளவு — 2 கிராம்

குடிநீர் — வெந்நீர், பனங்கட்டி

தீரும்நோய்கள் — கெர்ப்பவாயு, இரத்தசூலை, கெர்ப்பசூலை, திட்டுமறிபடல், சூதகபந்தம் தீரும்.

# லேகியங்கள்

மூலிகைச் சரக்குகளை பொடித்து, சாறுகளையாவது கியாழங்களையாவது, இளநீர், பால் ஆகியவற்றை வெல்லத்துடனாவது சீனியுடனாவது சேர்த்துக் காய்ச்சி பாகு பதம் வரும்பொழுது சூரணத்தையும் கொட்டிக் கிளறி நெய்யைச் சேர்த்துக் கையில் ஒட்டாத பருவத்தில் இறக்கி தேனைச் சேர்த்துக் கிண்டிப் பத்திரப்படுத்திக் கொள்ளும் மருந்து லேகியமாகும். இலேகியங்களின் பொதுவான செய்முறை இதுவாகும்.

## 1. அமுக்கிராய் லேகியம்

| | | |
|---|---|---|
| சுக்கு | மிளகு | தாதுவளை |
| திற்பிலி | அரத்தை | கண்டங் கத்தரி |
| இலவங்கப்பத்திரி | சாதிக்காய் | சந்தனம் |
| சித்திர மூல வேர்ப்பட்டை | திராட்சை | பேரீந்து |
| சிறுநாகம் பூ | கராம்பு | ஏலம் |
| சீரகம் | இலவங்கப்பட்டை | கண்டதிற்பலி |
| | | வ. கிறாம் 40 |

| | |
|---|---|
| சீனி 2கி. | அமுக்கிராய் 800 கிறாம் |
| பால் | 4 போத்தல் |
| தேன் | 2 போத்தல் |
| நெய் | 4 போத்தல் |

லேகிய முறைப்படி தயாரித்துக்கொள்ள வேண்டும்.

அளவு — ஒரு தேக்கரண்டி காலை, மாலை.

தீரும் நோய் — பூரிப்பு, வரட்டு இருமல், சோகை, பாண்டு, காமாலை, வாய்வு, குடற் பலவீனம், ஓய்ச்சல், உடலிளைப்பு, சோர்வு, நரம்புப்பல வீனம், சீரணசக்திக் குறைபாடு, சூடு, மெலிவு தீரும்.

## 2. நீற்றுக்காய் லேகியம்

| | | |
|---|---|---|
| திற்பிலி | சீரகம் | இலவங்கப் பட்டை |
| சுக்கு | மல்லி | இலவங்கப் பத்திரி |
| ஏலம் | மிளகு | வ. கிராம்—20 |

| | | |
|---|---|---|
| நீற்றுக்காய் | — | 4 கிலோ |
| சீனி | — | 4 கிலோ |
| நெய் | — | 1 போத்தல் |
| தேன் | — | ½ போத்தல் |

லேகிய முறைப்படி தயாரித்துக் கொள்ளவும்.

அளவு — ஒரு தேக்கரண்டி காலை, மாலை.

தீரும் நோய் — உடற்சூடு, சல எரிவு, மெலிவு, எலும்புருக்கி, வெள்ளை, மூலச்சூடு, உட்டணவாயு, விந்து நீர்த்தல் தீரும்.

## 3. நெல்லிக்காய் லேகியம்

| | | |
|---|---|---|
| சுக்கு | சீரகம் | மதுரம் |
| மிளகு | இலவங்கப்பட்டை | சிறுநாகம் பூ |
| திற்பலி | இலவங்கப்பத்திரி | ஏலம் |
| மூங்கிலுப்பு | மல்லி | வ, கிறாம் — 25 |

நெய் — 1 போத்தல்
தேன் — ½ போத்தல்
சீனி — 2 கிலோ
நெல்லிக்கனி — ½ கிலோ

| | | |
|---|---|---|
| தசமூலம் | ஆடாதோடை | கண்டங்கத்தரி |
| சிந்தில் | | வகை கிறாம் — 40 |

இயாழும் வைத்து நெல்லிக் கனியை அவித்து அரைத்து லேகிய முறைப்படி தயாரித்துக்கொள்ளவும்.

அளவு — ஒரு தேக்கரண்டி காலை, மாலை

தீரும் நோய் — மேகம், எலும்புக் காய்ச்சல், இ ர ா ணி, வாய்வுப் பொருமல், பித்த வாய்வு சம்பந்தமான நோய், மூலநோய்கள், இருமல், சளி, நெஞ்சு பலவீனம், கோழை, அருசி போகவெட்டை, பார்வைக் குறைவு, பித்த நோய்கள் தீரும்.

## 4. மதன காம லேகியம்

| | | |
|---|---|---|
| மதனகாமப் பூ | சந்தனம் | இலவங்கப்பட்டை |
| சிறுநாகம் பூ | தேற்றாவிதை | சாத்தாவாரி |
| மராட்டிமொக்கு | சாதிக்காய் | வாதுமைப் பருப்பு |
| கராம்பு | ஏலம் | சாலமிருக |
| | | வகை — 10 கிறாம் |
| அமுக்கிராய் | பூமிசக்கரை | நிலப்பனை |
| | | வகை — 50 கிறாம் |

பூனைக்காலி வித்து — 300 கிராம் குங்குமப் பூ — 5 கிறாம்
நெய் — 1½ போத்தல் தேன் — ½ போத்தல்
பசுப்பால் — 2 போத்தல் சீனி — 600 கிறாம்.

அளவு — ஒரு தேக்கரண்டி காலை, மாலை.

குடிநீர் — பசுப்பால், கற்கண்டு.

தீரும் நோய்கள் — ஆண்மையின்மை, விந்து குறைதல், விந்து நீர்த்தல், விரைவாக விந்து வெளியேறல், தண்டுச் சோர்வு, புணர்ச்சியில் வெறுப்பு நீங்கும். தங்கபற்பம், சேர்த்துண்பதால் அதிக பலன் விரைவாகக் கிடைக்கும், பிள்ளைப் பாக்கியம் உண்டாகும்.

## 5. தேற்றா விதை லேகியம்

தேற்றாக் கொட்டை — 300 கிறாம்

| | | |
|---|---|---|
| சுக்கு | கடுக்காய் | சித்தரத்தை |
| திற்பலி | நெல்லிக்காய் | நற்சீரகம் |
| மிளகு | தான்றிக்காய் | ஏலம் |

வகை — 30 கிறாம்

சர்க்கரை — 240 கிறாம் பசுப்பால் — 64 அவுன்ஸ்
பசுநெய் — 16 அவுன்ஸ் தேன் — 8 அவுன்ஸ்

லேகிய முறைப்படி தயாரித்துக் கொள்ளவேண்டும்.

அளவு — ஒரு தேக்கரண்டி.

குடிநீர் — பசுப்பால்

தீரும் நோய்கள் — சலச்சூடு, மேகவெட்டை, விந்து நீர்தல், ஆண்மைக் குறைவு, எலும்பு புருக்கி, உட்காய்ச்சல், மெலிவு தீரும்.

## 6. ஆடாதோடைரசாயனம்

ஆடாதோடைச் சாறு 8 போத்தல் கண்டங்கத்தரிச் சாறு ½ போத்தல்
கருந்துளசிச் சாறு 1½ போத்தல் தேன் 6 போத்தல்

| | | | |
|---|---|---|---|
| சுக்கு | மிளகு | திப்பிலி | கடுக்காய் |
| நெல்லி | தான்றிக்காய் | கராம்பு | இலவங்கப்பட்டை |
| ஏலம் | சாதிபத்திரி | சிற்றரத்தை | மதுரம் |
| சாதிக்காய் | தாளிசபத்திரி | | |

வகை 15 கிறாம்

செய்கை — சரக்குகளை பொன்னிறத்தில் வறுத்து இடித்து எல்லாவற்றையும் ஒன்றாக கலந்து காய்ச்சி இரசாயனபதத்தில் இறக்கி பத்திரப்படுத்துக.

அளவு — அரை முதல் ஒரு தேக்கரண்டி

தீரும் நோய்கள் — கக்குவான், இருமல், ஈளை, இளைப்பு, மூச்சுமுட்டு.

# பாகு

## 1. இஞ்சிப்பாகு

| | |
|---|---|
| இஞ்சிச்சாறு | மாதுளம்பழச்சாறு |
| செவ்விளநீர் | கருப்பஞ்சாறு |
| பசுப்பால் வகை 2 போத்தல் | வகை 1 போத்தல் |
| நெய் — 2 போத்தல் | வெள்ளுள்ளிச்சாறு—½ போத்தல் |
| தேன்—1 போத்தல் | |

| | | | |
|---|---|---|---|
| ஏலம் | மிளகு | கடுக்காய் | இலவங்கம் |
| நற்சீரகம் | குறாசாணி | கராம்பு | கருஞ்சீரகம் |
| சிற்றரத்தை | சதகுப்பை | அதிவிடயம் | பேரரத்தை |
| சுக்கு | மல்லி | மதுரம் | திறபலி |
| மாயாக்காய் | காசுக்கட்டி | ஓமம் | கடுகுரோகணி |
| கஎிப்பாக்கு | கறுவா | சிறுதேக்கு | உலுவா |
| வசம்பு | கோட்டம் | செஞ்சந்தனம் | வெண்சந்தனம் |
| வால்மிளகு | சாதிக்காய் | அமுக்கிராய் | நிலப்பனை |
| முத்தற்காசு | | | |

செய்கைமுறை — பாகுமுறைப்படி தயாரித்துக் கொள்ளவும்.

அளவு — 1 தேக்கரண்டி

தீரும்நோய்கள் — பெற்றவள் வயிற்று நோ, வயிற்றுப்புண், தேகவெளுப்பு, இரத்தக் கெடுதல், அசதி, இருமல், வெள்ளைசாய்தல், பசியின்மை, மெலிவு, அகட்டுவாய்வு தீங்கும்.

## 2. உள்ளிப்பாகு

| | |
|---|---|
| வெள்ளுள்ளி — 500 கிறாம் | பசுப்பால் — 5 போத்தல் |
| சீனி — 500 கிறாம் | நெய் — ½ போத்தல் |
| தேன் — ½ போத்தல் | |

| | | | |
|---|---|---|---|
| தேவதாரம் | அமுக்கிராய் | ஏலம் | வசுவாசி |
| தக்கோலம் | சாதிக்காய் | ஓமம் | கோரைக்கிழங்கு |
| கராம்பு | வெண்கோட்டம் | நிலப்பனை | அகில் |
| குருசாணி ஓமம் | செவ்வள்ளி | சந்தனம் | அரத்தை |
| நற்சீரகம் | கருஞ்சீரகம் | பெருஞ்சீரகம் | இலவங்கம் |
| வால்மிளகு | மாயாக்காய் | சிறுநாகம்பூ | திற்பலி மூலம் |
| காயம் | கண்டங்கத்தரி வேர் | சாறணை | நயுரிவி |
| நன்னாரி | தூதுவளை வேர் | | வகைக்கு—5 கிறாம் |

செய்கைமுறை — பாகுமுறைப்படி தயாரித்து எடுத்துக் கொள்ளவும்.

அளவு — 1 தேக்கரண்டி

தீரும்நோய்கள் — பிரசவித்த பெண் வயிற்றுப்புண், மேகம், சத்தி, விக்கல், மகோதரம் பிரமேகம், தேகச்சொறி, இருமல், பித்தநோய் 48, உதரக்கிருமி, சிலேற்பனம், வெள்ளோக்காளம் தீரும். 1 மண்டலம் உட்கொள்ள வீரியவிருத்தி, உடல்பூரிப்பு, கண் ஒளி உண்டாகும்.

# பற்பம் அல்லது நீறு

கந்சரக்குகளாகிய, ரசம், லோகம், மணிகள், பாடாணம் சங்கு கொம்புகள் முதலியவற்றை மாரணச்சரக்குகளைச்சேர்த்து மூலிகைச்சாறோ, செயநீரோ, சூடநீரோ விட்டரைத்து முப்புவும் சேர்த்து நன்றாக பொடியானபின் வில்லை தட்டி காயவைத்து ஓட்டில் இட்டு சிலைமண்செய்து காயவைத்து வரட்டியில் புடம் இட்டோ, அடுப்பில் தீயால் எரித்தோ, வட்டிலில் வெயிலில் காயவைத்தோ, நீறப்பண்ணி எடுத்து அம்மியில் இட்டு பொடியாக அரைத்து எடுத்துக்கொள்ளும் மருந்துகள் பற்பம் அல்லது நீறு எனவழங்கப்படும். இவ்வாறு நீறிய மருந்துகள் நல்ல வெண்மையாகக் காணப்படும். சிலமருந்துகள் நிறம் குறைந்து விதிவிலக்காக காணப்படுவதும் உண்டு. பெரும்பாலான மூலிகைச்சரக்குகளை சேர்த்து செய்யப்படும் சூரணங்களில் சில கற்சரக்குகள் சேர்வதாலும், அவை அம்மியில் இட்டு மூலிகைச்சாறுகள் சேர்த்து அரைக்கப்பட்டு சூரியபுடமோ, சட்டிப்புடமோ, போடுவதாலும் அவை பற்பம்என வழங்கப்படுகின்றன. சில சரக்குகளை செவ்விள நீர், அல்லது மூலிகைச்சாறுகள், அல்லது தாய்ப்பால் விட்டு அரைத்து அம்மியிலேயே காயவிட்டு எடுக்கும் மருந்துகளுக்கும் பற்பம் என்ற பெயர் வழங்கப்படுகிறது.

## 1. குமரி பற்பம்

| | |
|---|---|
| பெருங்காயம் — 60 கிராம் | திப்பலி |
| ரசம் — 30 கிராம் | நற்சீரகம் |
| கந்தகம் — 80 கிராம் | கருஞ்சீரகம் |
| காந்தம் — 60 கிராம் | உலுவா |
| அரைபொடி — 60 கிராம் | ஓமம் |
| சுக்கு — 60 கிராம் | இந்துப்பு |
| மிளகு — 60 கிராம் | ஏலம் |
| | மரமஞ்சல் |
| | வகை — 10 கிராம் |

அரைப்பு — இஞ்சிச்சாறு, கையாந்தகரைச்சாறு, கற்றாளைச்சாறு ஒவ்வொருநாள் அரைப்பு சூரியபுடம் இடவும்.

அளவு — வெருகடிப்பிரமானம் 40 கிரெயின்

குடிநீர் — தேன்

தீரும்நோய்கள் — கிராணி, குன்மம், வாதசூலை, சூடகரிவாயு, குடல்வாயு தீரும்.

## 2. மதிகாந்த பற்பம்

குதம், கெந்தகம், காந்தம், அரைபொடி,
பெருங்காயம், மிளகு, சுக்கு, வகை — 30 கிராம்
இருசீரகம், திற்பலி, இந்துப்பு, ஏலம்,
உறுவா, ஓமம், சுராம்பு, வசுவாசி,
சாதிக்காய், உள்ளி கடுக்காய், இலவங்கம்.
வகை — 10 கிராம்

வெண்சந்தனம் – 330 கிராம்

அரைப்பு — இஞ்சிச்சாறு, கையாந்தகரைச்சாறு, கற்றாளை

அளவு — வெருகடிப்பிரமாணம் — 40 கிரெயின்

குடிநீர் — பனைவெல்லம், தேன்

தீரும்நோய்கள் — கெர்ப்பவாயு, கெர்ப்பசூலை, சுரோணிதகெர்ப்பவாயு, கெர்ப்பக் கிருமி, கெர்ப்பக்கிரந்தி, இரத்தசூலை, சூதிகாவாயு தீரும், கெர்ப்ப நோய்கள் நீங்கி கருத்தரிக்கும்.

## 3. கந்தக பற்பம்

நெல்லிக்காய்கந்தகம் — 80 கிராம்

செய்கை — சிறுகடலையளவில் சிறுதுண்டுகளாக உடைத்து வைத்துக் கொள்ளவும். மருதம் பட்டை சுட்டசாம்பல் காரத்தினை எடுத்து செந்தூரம் எரிக்கின்ற சட்டியில் போட்டு அதின்மேற் கந்தக பொடியை பரப்பி மீண்டும் சாம்பலை கொட்டி பக்குவம் பண்ணி அடுப்பேற்றி நீறும் வரை எரித்து ஆறவிட்டு இறக்கி அரைத்து மீண்டும் கொடிவேலி சேர்த்து ஒரு புடமிட பற்பமாகும்.

அளவு — 250 மி. கி.

குடிநீர் — நெய், தேன்

தீரும்நோய்கள் — கரப்பன், கிரந்தி, விரணம், மதுமேகம், சொறி, சிரங்கு, குட்டம், — வயிற்றுவலி, பசியின்மை, தீரும்.

## 4. பெரிய கறுப்புத்தூள்

சாதிக்காய் நற்சீரகம் கருஞ்சீரகம் வகைக்கு — 100 கிராம்

இரசம் — 150 கிராம், கெந்தகம் — 300 கிராம்
சுக்கு — 100 கிராம் சாதிலிங்கம் — 100 கிராம்
வசம்பு — 100 கிராம் பொன்னரிதாரம் 100 கிராம்
பொரிகாரம் — 200 கிராம் வெண்காரம் — 100 கிராம்

அரைப்பு — அம்மியில் இட்டு அரைத்தும் இடித்த தூள்களை ஒன்றாசேர்த்தரைத்தும் எடுத்துக்கொள்ள வேண்டும்.

அளவு — இருவிரல் பிரமாணம் 5—10 (கிரெயன்) அரிசியெடை.

குடிநீர் — உள்ளிச்சாறு, சுக்குநீர், அவுரிச்சாறு, கம்பியுப்பு, கியாழம் இஞ்சிச்சாறு.

தீரும்நோய்கள் — குத்துக்கழிச்சல், செரியாப்படுவன், அருவருப்பு, சத்தி, வாதம், நடுக்கம், காய்ச்சல் சந்நி, கொடிய வாய்வுரோகம், குன்மம் நீங்கும் சிசு சுகமாகப்பிறக்கும்.

## 5. மாயாக்காய் பற்பம்

மாயாக்காய், சாதிக்காய், வெண்காரம், சாத்திரபேதி, வெருடபச்சை வகைக்கு — 100 கிராம்

அரைப்பு — இடித்து பொடியாக அரைத்து எடுத்துக்கொள்ளவும்

அளவு — இருவிரல் பிரமாணம் ( 1 கிராம் )

குடிநீர் — தேன், பசுநெய், கியாழம்

தீரும்நோய்கள் — வாய்ப்புண், அக்கரம், ஈறுகரைதல், வயிற்றுப்புண் வயிற்றுநோ, வெள்ளைபடுதல், இரத்தபேதி, பெரும்பாடு, நீரில் இரத்தம்போதல் தீரும்

## 6. சங்குபற்பம்

சங்கு — 400 கிராம்,

ஆகாயத்தாமரையிலையை அரைத்து பாற்சங்கின்மீது தப்பி 1 நாள் வெயிலில் உலர்த்தி புடமிடவும்.

அளவு — 2 அரிசியெடை

குடிநீர் — நெய், தேன், ஆட்டுப்பால்

தீரும்நோய்கள் — குன்மம், ஈரலைப்பற்றியவியாதி, சலஎரிவு, நீர்கருக்கு, கபம், கண்ணைச்சத்து குறைபாடு நீங்கும்.

## 7. கற்பூரசலாசத்து பற்பம்

சிலாசத்து — 200 கிராம்

சிறு செருப்படைச்சாற்றால் நன்றாக அரைத்து சிறு வில்லைகளாக செய்து காயவைத்து ஓட்டிலிட்டுச்சீலை செய்து உலர்த்தி 50 வரட்டியில் புடம்போடவும், இவ்வாறு மும்முறை புறம்போடப் பற்பமாகும்.

அளவு — 2–4 குன்றி எடை

குடிநீர் — பசுவெண்ணெய், பசுநெய், தேன்

தீரும்நோய்கள் — பித்தவெட்டை, நீர்க்கடுப்பு, நீர்எரிவு, உடல்எரிவு தீரும்.

## 8, பலகரை பற்பம்

பலகரை — 100 கிராம்

தேசிப்புளி விட்டரைத்து வில்லைதட்டி காயவைத்து ஓட்டிலிட்டு சீலைமண்செய்து புடம் போட்டு எடுக்கவும்.

அளவு — 2–4 குன்றிஎடை

குடிநீர் — தேன், நெய், வெண்ணெய்

தீரும்நோய்கள் — இருமல், சுவாசப்பை பலவீனம், கரப்பன், குடல் பலவீனம், கண்ணைச்சத்து குறைபாடு தீரும்

## 9. ஆமை ஓட்டுப் பற்பம்

ஆமைஓடு — 200 கிராம்

பூநாகத்தை கள்ளிப்பால் விட்டரைத்து கவசித்து உலர்த்தி ஓட்டிலிட்டு சீலைமண்செய்து உலர்த்தி கஜபுடமிட்டு எடுக்க பற்பமாகும். பின்னர் ஆடாதோடைச்சாறு விட்டரைத்து மறுபடியும் புடமிட்டெடுக்கவும்

அளவு — 1–2 அரிசியெடை

குடிநீர் — நெய், பச்சைவெண்ணெய்

தீரும்நோய்கள் — மாந்தம், மாந்தக்கழிச்சல், 9 மூலம் தீரும்

## 10. சிங்கி பற்பம்

மான்கொம்பு — 100 கிராம்

ஏலரிசியை நீர்விட்டரைத்து கவசம் செய்து காயவைத்து புடமிட்டெடுக்க பற்பமாகும்.

அளவு — 1—2 அரிசியெடை

குடிநீர் — பச்சைவெண்ணெய், நெய்

தீரும் நோய்கள் — எலும்புருக்கி, கணை, இருமல், அம்மை, மார்புநோய் தீரும்.

## 11. காரீய பற்பம்

காரீயம் 80 கிராம் இரசம் 80 கிராம்

செய்கை — ஓட்டிலிட்டு உருக்கி ஆடுதீண்டாப்பாளை வேரால் வறுக்க நீறும். பின் இரசத்தைச் சேர்த்து சாறணைச் சாற்றால் 12 மணிநேரம் அரைத்து 3 புடம் போட பற்பமாகும்.

அளவு — 5 அரிசி எடை

குடிநீர் — வெண்ணெய், மாதுளம் பூ, நற்சீரகம்.

தீரும் நோய்கள் — மேகம் 21, உடற்குடு, எலும்புருக்கி.

# செந்தூரம்

இரசம் முதலான பாடாணச்சரக்குகள், நவமணிகள், நவ லோகங்கள், கற்சரக்குகள், காரசாரங்கள், உபரசங்கள் ஆகியவற்றை மாரணச் சரக்குகளைச் சேர்த்து மூலிகைச்சாறு, செயநீர், குடநீர் முதலியவற்றை விட்டு முப்புவும் சேர்த்தரைத்து வில்லை தட்டி, காயவைத்து ஓட்டிலிட்டு சீலை மண் செய்து வரட்டியில் புடமிட்டு அல்லது அடுப்பேற்றி எரித்து, அல்லது வாலுகையில் வைத்து எரித்தோ, அல்லது வெயிலில் வைத்தோ செந்தூரமாக எடுத்து அம்மியில் இட்டு அரைத்து எடுத்துக் கொள்வதாகும். இவை நல்ல சிவப்பாகவும், கருஞ் சிவப்பாகவும், இளஞ் சிவப்பாகவும் பெரும்பாலும் காணப்படும். விதிவிலக்காக நிறம் காணப்படுவதும் உண்டு. சில செந்தூரங்களை ஓட்டிலிட்டு சிவக்க வறுத்தும் செந்தூரமாக எடுத்துக் கொள்வது உண்டு. வேறு சில வழிகளிலும் செந்தூரங்கள் தயாரிக்கும் வழக்கம் உண்டு. சிவந்த நிறத்தில் காணப்படுவதாலும் உடலுக்கு உரமருந்தாக இருப்பதாலும் இம் முறையில் தயாரிக்கப்பட்ட மருந்துகளை செந்தூரமென அகத்தியர் முதலான சித்தர்கள் அழைத்தனர்.

## 1. அயசெந்தூரம்

அயப்பொடி — 100 கிராம்

அரைப்பு — ஓதியப்பட்டைச்சாறு, அரைத்து வில்லை தட்டி காயவைத்து ஓட்டில் இட்டு சீலை மண்செய்து உலரவைத்து முழப்புடம் இடவும். இவ்வாறு 10ப் புடமிட செந்தூரம் ஆகும்.

அளவு — அரிசியெடை குடிநீர் — தேன்

தீரும் நோய்கள் — பாண்டு, காமாலை, சோகை தீரும்

## 2. அயகாந்த செந்தூரம்

அயம் — 100 கிராம் காந்தம் — 100 கிராம்

அரைப்பு — கற்றாளைச்சாறு விட்டு அரைத்து வில்லை தட்டி காயவைத்து ஓட்டி விட்டு சீலைமண்செய்து முழப்புடம் போடவும். மீண்டும், மீண்டும் அரைத்து 7 முறை புடம் இடவும்.

அளவு — அரிசியெடை குடிநீர் — தேன், திரிகடுகுத்தூள்

தீரும் நோய்கள் — பாண்டு, காமாலை, சோகை, ஈரல் வியாதிகள், வாதநோய்கள், வாயுரோகங்கள் தீரும்.

## 3. அன்னபேதிச்செந்தூரம்

அன்னபேதி — 100 கிராம்

அரைப்பு — கற்றாளைச் செயநீர் விட்டு அரைத்த வில்லை தட்டி காயவைத்து, ஓட்டி விட்டு சீலை மண்செய்து உலரவைத்து புடமிட்டெடுக்கவும். வில்லையை எடுத்து அரைத்து எடுத்துக்கொள்ள வேண்டும்.

அளவு — 2 அரிசி எடை குடிநீர் — தேன்

தீரும் நோய்கள் — வெப்பு, பாண்டு, காமாலை, சிதபேதி காழ்ச்சல் கட்டி, அன்னத்திரவ சூலை, பரிணாம சூலை, சூலை தீரும், பெருவயிறு, வீக்கம் தீரும்.

## 4. ஆறுமுகசெந்தூரம்

இரசம் — 50 கிராம்
வெண்காரம் — 80 கிராம்
நெல்லிக்காய் கெந்தகம் — 90 கிராம்
காந்தம் — 70 கிராம்
இந்துப்பு — 40 கிராம்
இரும்பு அரைபொடி — 120 கிராம்

அரைப்பு — பிள்ளைக்கற்றாளைச் சாறு விட்டு அரைத்து வில்லைதட்டி காயவைத்து ஓட்டில் இட்டு 7 சிலைமண் செய்து உலரவைத்து முழப் புடமிடவும். இவ்வாறு மீண்டும் மீண்டும் 5 புடமிடவும். பின்னர் எடுத்து அம்மியில் இட்டு அரைத்து பத்திரப்படுத்திக் கொள்ளவும்.

அளவு — 200 மி. கிராம்
குடிநீர் — திரிகடுகு, நெய், தேன், இஞ்சிச்சாறு.

தீரும் நோய்கள் — பாண்டு, சூலை, வாதநோய், சந்நி, கிரகணிநோய், காசம், மகோதரம், பிரமை, வாயு, மலடு, விடம், மூலரோகம் தீரும்.

## 5. காந்தசெந்தூரம்

காந்தம் — 100 கிராம்

அரைப்பு — பிள்ளைக்கற்றாளைச் சாறுவிட்டரைத்து வில்லைதட்டி காயவைத்து ஓட்டில் இட்டு சிலைமண் செய்து உலரவைத்து முழப்பிடமிடவும். இவ்வாறு 3 புடமிடவும். எடுத்து அம்மியில் நன்றாக அரைத்துக்கொள்ளவும்.

அளவு — 200 மி. கிராம்.
குடிநீர் — தேன்

தீரும்நோய்கள் — பாண்டு, காமாலை, சோகை, ஈரல் வீக்கம், மண்ணீரல் வீக்கம், களைப்பு, இளைப்பு தீரும். இரத்தம் விருத்தியுண்டாகும்.

## 6. படிகலிங்கசெந்தூரம்

சாதிலிங்கம் — 10 கிராம்
படிகாரம் — 90 கிராம்

படிகாரத்தை ஓட்டில் இட்டு அதன் நடுவில் சாதிலிங்கக் கட்டியை வைத்து ஓடு மூடி சிலைமண்செய்து புடமிட்டெடுத்து அம்மருந்தைக் குழி அம்மியில் இட்டு கடுக்காய்ப்பூ கியாழம் விட்டு அரைத்து உலர்த்தி அரைத்து உலர்த்தி இவ்வாறு மூன்றுமுறை அரைத்து உலர்த்திக்கொள்ளவும். பின்னர் நன்கு அரைத்து பத்திரப்படுத்திக் கொள்ளவும்.

அளவு — 250 மி. கிராம்
குடிநீர் — தேன், நெய், கியாழம், சாறு.

தீரும் நோய்கள் — சீதக்கழிச்சல், இரத்தக் கழிச்சல், வயிற்றுக் கழிச்சல், கிராணிக்கழிச்சல், வயிற்றுக் கடுப்பு, வயிற்றுளைவு தீரும்.

## 7. இலிங்கசெந்தூரம்

லிங்கம் — 40 கிராம்
விலைவுகற்பூரம் — 40 கிராம்
பாற்சாம்பிராணி 40கிராம்
நுணாப்பட்டைத்தூள் 100 கிராம்.

கற்பூரத்தையும், சாம்பிராணியையும் நன்றாக அரைத்து சேலைத்துணியில் தடவி லிங்கத்தை கவசித்து கொழுத்திவிடவும். இவ்வாறு 7 முறை செய்யவும். பின்னர் நுணாப்பட்டையை இடித்து ஒரு சிறு குடுவையில் பாதியளவிற்குப் போட்டு அதன்மீது லிங்கக்கட்டியை வைத்து மீதி நுணாப்பட்டைத் தூளைப்போட்டு சில்லிட்டு சிலைசெய்து 5 வராட்டியில் புடமிட்டெடுத்து அரைத்து வைத்துக்கொள்ளவும்.

அளவு — 30 — 60 மி. கிராம்
குடிநீர் — தேன்

தீரும் நோய்கள் — குளிர்சுரம், சந்நி, வாதப்பிணிகள், வாதகபப்பிணிகள், மேகப்பிணிகள் தீரும்.

## 8. பூங்காவிச் செந்தூரம்

காவிக்கல் — 50 கிராம் சீனக்காரம் — 50 கிராம் செவ்விளநீர் 3

குழி அம்மியில் இட்டு செவ்விளநீரைவிட்டு அரைத்து உலர்த்திக்கொள்ளவேண்டும்.

அளவு — 250 — 500 மி. கிறாம் குடிநீர் — தேன்.

தீரும் நோய்கள் — பெரும்பாடு, வாயவியல், சலதாரைப்புண், இரத்தபித்தம் தீரும்,

## 9. சண்டமாருத செந்தூரம்

சாதிலிங்கம் — 10 கிறாம் கெந்தகம் — 2½ கிறாம் இரசகற்பூரம் — 5 கிறாம்
இரசசெந்தூரம் — 2½ கிறாம் வீரம் — 2½ கிறாம்.

தாய்ப்பால் விட்டரைத்து உலர்த்தி பொடித்து எடுத்துக்கொள்ளவும்.

அளவு — 60 — 125 மி. கிறாம் குடிநீர் — பனைவெல்லம்.

தீரும் நோய்கள் — ஒட்டு ரோகங்களும், முக்குற்றங்களால் உண்டாகிய பிணிகளும் தீரும். பத்தியமாக உண்ணுதல் வேண்டும். வரள்கரப்பான் நோய்க்கு பசுவெண்ணெயில் குழைத்து வெளிப்பிரயோகமாக பாவித்து வரவும். பௌத்திரம், வாதம், வெடிசூலை, கண்டமாலை அரையாப்பு தீரும்.

## 10. மண்டூர செந்தூரம்

கிச்ச கிட்டம் 1 கிலோ.

நன்றாக சிவக்கும் அளவுக்கு கொல்லன் உலையில் காய்ச்சித் தோய்க்கவேண்டும். ஒவ்வொரு முறையும் புதிதாக கோசலம் வைக்க வேண்டும். பின்னர் கையாந்தகரைச் சாற்றில் தோய்க்க வேண்டும். அதன் பின் கற்றாளைச் சாற்றில் அரைத்து வில்லைதட்டி புடமிடவும். நன்றாக சிவக்கும் வரை புடமிடவும். பின்னர் குழியம்மியிலிட்டு அரைத்து எடுத்துக்கொள்ளவும்.

அளவு — 1 — 2 அரிசி எடை குடிநீர் — தேன்.

தீரும் நோய்கள் — பாண்டு, காமாலை, இரத்தக் கெடுதி, வீக்கம், சூர்நீர், களைப்பு இளைப்பு, பார்வைக்குறைவு தீரும்,

# காடி மருந்துகள்

மருந்துச் சரக்குகளை கூறப்பட்ட அளவுகளில் எடுத்து, துப்பரவு செய்தபின் அளந்து காயவைத்து இடித்து எடுத்துக் கொள்ளவேண்டும் கியாழம் வைக்க வேண்டிய சரக்குகளை $\frac{1}{8}$ ஆகவோ $\frac{1}{4}$ ஆகவோ அவித்து வடித்து எடுத்துக் கொள்ளவேண்டும். கியாழம் அல்லது நீருடன் மண் அண்டாவில் சரக்கையும், போட்டு சாறுகள், கோசலம், வெல்லம் தேன், கள் ஆகியவற்றில் சேர்க்க வேண்டியவற்றைச் சேர்த்து காடி பழுதாகாமல் இருப்பதற்கு உரிய மூலிகைகளையும் சேர்த்து ஒன்றாக கலக்கி மூடிக்கட்டி காற்றுப்புகாமல் மண் சீலை செய்து நிலத்தில் புதைத்து ஒரு மண்டலம் ஊறிய பின் எடுத்திடித்து பாவித்தலாகும். இம் முறைப்படி தயாரிக்கும் மருந்துகள் காடி மருந்துகள் எனப்படும்.

## 1. தாமரைக் காடி

| | | |
|---|---|---|
| தாமரைக் கிழங்கு | நன்னாரி வேர் | கடுக்காய் |
| நெல்லி வற்றல் | தான்றிக்காய் | அவுரிவேர் |
| மருதம் பட்டை | இலுப்பைப் பூ | மஞ்சிட்டி |
| பூலாங் கிழங்கு | பற்படாகம் | வசம்பு |
| அதிமதுரம் | சடாமாஞ்சில் | சிவதை |

வகை - 40 கிறாம்

வெல்லம் – 10 கிலோ    தேன் – 3 லீற்றர்    நீர் – 15 லீற்றர்

காடி முறைப்படி தயாரித்து வடித்து எடுத்தல்

அளவு – 5 மி. லி – 15 மி. லி. பாலர்    15 மி. லி. 30 மி. லீ. பெரியவர்

தீரும் நோய்கள் – பாலர் நோய்கள், கிரகபீடை, மனோவியாதி. உடல் எரிவு, கொதிப்பு நீங்கும், பலம், உற்சாகம், பசி, பூரிப்பு, வாணாள் அதிகரிக்கும்.

## 2. சூரத்தாமரைக் காடி

சூரத்தாமரை இலை - 320 கிறாம்    பெருஞ்சீரகம் – 320 கிறாம்
ஏலம் 20 கிராம்    சிவதை – 20 கிறாம்
பூனைக்கண் குங்கிலியம் - 20 கிராம்
சீனி – 3 கிலோ    தேன் — 1 $\frac{1}{2}$ லீற்றர்
நீர் - 7 $\frac{1}{2}$ லீற்றர்

காடி முறைப்படி தயாரித்து வடித்து எடுத்துக்கொள்ளவும்

அளவு - 5 மி. லீ – 15 மி. லீ பாலர்
15 மி. லீ — 30 மி. லீ பெரியவர்

தீரும் நோய்கள்:- மலபந்தம், தோல் நோய்கள் நீங்கும்

## 3. இலாமிச்சுக் காடி

இலாமிச்சு
வெட்டிவேர்
பேய்புடல்
பூலான் கிழங்கு
ஆலம்பட்டை
வெல்லம் — 10 கிலோ

தாமரைக்கிழங்கு
அத்திப்பட்டை
இலவம்பிசின்
பற்படாகம்
வட்டத்திருப்பி
தேன் — 6 லீற்றர்

பெருஞ்சீரகம்
நிலவேம்பு
பெருங்குமிழ்
கடுகரோகணி
வகை-40 கிராம்
நீர் — 15 லீற்றர்

காடி முறைப்படி தயாரித்து எடுத்துக்கொள்ளவும்

அளவு — 5 மி. லீ — 15 மி. லீ பாலர்
15 மி. லீ — 30 மி. லீ பெரியவர்

தீரும் நோய்கள் — இரத்தபித்தம், பிரமேகம், தாகம், தாபம், பாண்டு, வரட்சி, கிருமி, குட்டம், மூலம் தீரும்,

## 4. சந்தனக் காடி

சந்தனம் 80 கிறாம்
தாமரைக்கிழங்கு
பூலாங் கிழங்கு
பெருங் குமிழ்
நிலவேம்பு

செஞ்சந்தனம்
அரசம் பட்டை
அதிமதுரம்
நெய்தல்
மாம் பட்டை

கோரைக்கிழங்கு
ஆலம் பட்டை
பேய்ப்புடல்
இலவம் பிசின்
சித்தரத்தை
வகை — 40 கிராம்

வெல்லம் - 12 கிலோ

தேன் — 3 லீற்றர்

நீர் — 15 லீற்றர்

காடி முறைப்படி தயாரித்து வடித்து எடுத்துக்கொள்ளவும்;

அளவு - 5 மி. லீ — 15 மி. லீ பாலர்
15 மி. லீ - 30 மி. லீ பெரியார்

தீரும் நோய்கள் - சலப்பை, கர்ப்பப்பை நோய்கள்
சூடு, தாகம், தாபம் தீரும், பலம் தரும்.

## 5. சாறணைக் காடி

சாறணை 80 கிறாம்
சுக்கு
கடுக்காய்
ஆமணக்குவேர்
சிறு காஞ்சோன்றிவேர்
கடுகுரோகணி
வெல்லம் — 10 கிலோ

ஆடாதோடைவேர்
திற்பலி
நெல்லிவற்றல்
வேப்பம்பட்டை
கண்டங்கத்தரி
சீந்தில்

மிளகு
தான்றிக்காய்
நெருஞ்சி
நீர்முள்ளி
வகை — 40 கிராம்

தேன் — 3 லீற்றர்

நீர் — 15 லீற்றர்

காடி முறைப்படி தயாரித்து வடித்து எடுத்துக்கொள்ளவும்

அளவு — 5 மி. லீ — 15 மி. லீ பாலர்
15 மி. லீ — 30 மி. லீ பெரியவர்

தீரும் நோய்கள் — விக்கம், பெருவயிறு, பிலிகை, ஈரல் விக்கம், குன்மம், புளியேப்பம், மூத்திரப்பிணி, சுரம் தீரும்.

## 6. நன்னாரிக்காடி

நன்னாரிவேர்
சிந்தில்
தாமரைக் கிழங்கு
ஆலம்பட்டை
சந்தனம்
கோரைக் கிழங்கு
ஏலம்
இளாமிச்சு
அரசம் பட்டை
நெல்லிவற்றல்
செஞ்சந்தணம்
பூலாங் கிழக்கு
கடுக்காய்தோல்
கோட்டம்
இலவங்கபத்திரி
வகை — 160 கிராம்

வெல்லம் — 10 கிலோ
நீர் — 15 லீற்றர்

காடி முறைப்படி தயாரித்து வடித்து எடுத்துக்கொள்ளவும்

அளவு — 5 மி. லீ — 15 மி. லீற் பாலர்
15 மி. லீ — 30 மி. லீ பெரியவர்

தீரும் நோய்கள் — மேகம், பசுந்தரம், வாதரக்தம், குறிநோய் தீரும்.

## 7. அயக் காடி

இரும்பரப் பொடி
கொடி வேலிவேர்
மிளகு
கடுக்காய்
கோரைக் கிழங்கு
சுக்கு
வாய்விடாங்கம்
நெல்லிவற்றல்
தான்றிக்காய்
சிற்றேலம்
வேப்பம்பட்டை
சிந்தில்
வகை — 160 கிறாம்

வெல்லம் — 6 கிலோ
நீர் — 12 லீற்றர்

காடி முறைப்படி தயாரித்து வடித்து எடுத்து கொள்ளவும்.

அளவு — 5 மி. லீ — 15 மி. லீ பாலர்
15 மி. லீ — 30 மி. லீ பெரியவர்

தீரும் நோய்கள் — பாண்டு, காமாலை, கிருமி நோய்,
தோல் நோய் நீங்கும். இரத்தத்தை சுத்திகரிக்கும், இரத்தவிருத்தி பலம் உண்டாகும்.

## 8. திரிபலைக் காடி

கடுக்காய்
நெல்லிக்காய்
தான்றிக்காய்
வெல்லம் — 6 கிலோ

கொடிவேலி
வாய்விடங்கம்
திற்பலி

இரும்பரப் பொடி
ஓமம்
வகை — 160 கிறாம்
தேன் — 2 லீற்றர்

நீர் — 8 லீற்றர்

காடி முறைப்படி தயாரித்து வடித்துக்கொள்ளவும்

அளவு — 5. மி லி — 15 மி. லி பாலர்
15. மி. லி — 30 மி. லி பெரியவர்

தீரும் நோய்கள் — மலச்சிக்கல், மூலவீக்கம், பாண்டு காமாலை நீங்கும்.

## 9. கோசலக் காடி

சித்திரமூலம்
மிளகு
சுக்கு

திற்பலி

வகை — 160 கிறாம்

தேன் — 2 லீற்றர்

கோசலம் — 3 லீற்றர்

காடி முறைப்படி தயாரித்து வடித்து எடுத்துக்கொள்ளவும்.

அளவு — 5 மி. லி — 15 மி. லி பாலர்
15 மி. லி — 30 மி. லி பெரியவர்

தீரும் நோய்கள் — தோல்வியாதிகள், வெண்குட்டம் முதலியன தீரும்.

## 10. திப்பிலிக் காடி

திப்பிலி
இலவங்கப்பத்திரி
மஞ்சல்
சந்தணம்

கராம்பு
ஏலம்
வெட்டிவேர்
செவ்வியம்

இலவங்கம்
சடாமாஞ்சில்
சிறுநாகம் பூ
மிளகு
வகை — கிறாம்;

லெல்லம் — 10 கிலோ

நீர் — 20 லீற்றர்

காடி முறைப்படி தயாரித்து வடித்து எடுத்துக்கொள்ளவும்.

அளவு — 5 மி. லி — 15 மி. லி பாலர்
15 மி. லி — 30 மி. லி பெரியவர்

தீரும் நோய்கள் — சரீரமெலிவு, குன்மம், பெருவயிறு கிரகணி, பாண்டு, மூலம், இருமல் நீங்கும்.

## 11. ஊமத்தைக் காடி

ஊமத்தை இலை — 160 கிராம் | ஆடாதோடைவேர் — 160 கிராம்

கண்டங்கத்தரி | தாளிசபத்திரி | சிறுநாகம் பூ
சிறுதேக்கு | சுக்கு | அதிமதுரம்
சிற்றேலம் | | வகை — 80 கிராம்

வெல்லம் — 6 கிலோ | தேன் — 3 லீற்றர்

நீர் — 12 லீற்றர்

காடி முறைப்படி தயாரித்து வடித்து எடுத்துக்கொள்ளவும்.

அளவு — 5 மி. லீ — 15 மி. லீ பாலர்
15 மி. லீ — 30 மி. லீ பெரியவர்

தீரும் நோய்கள் — சுவாசத்தொகுதி நோய்களை நீக்கும்
இருதயம், சுவாசப்பை பலமடையச் செய்யும்.

## 12. சிற்றாமட்டிக் காடி

சிற்றாமட்டி — 6 கிலோ | அமுக்கிராய் — 6 கிலோ
ஆமணக்கம்வேர் — 80 கிராம் | வெல்லம் — 18 கிலோ

இலாமிச்சு | ஏலம் | கடுக்காய்
இலவம் பட்டை | நெருஞ்சில் | அரத்தை
வகை — 40 கிராம்.

80 போத்தல் நீர் விட்டு சிற்றாமட்டி, அமுக்கிராய், ஆமணக்குவேர் ஆகியவற்றை கஷாயம் வைத்து 20 போத்தலாக வற்றவைத்து, சரக்குகளைப் போட்டு காடி முறைப்படி தயாரித்து வடித்து எடுத்துக்கொள்ளவும்.

அளவு — 5 மி. லீ — 15 மி. லீ பாலர்
15 மி. லீ — 30 மி. லீ பெரியவர்

தீரும் நோய்கள் — சகல வாத நோய்கள், சுரங்கள் நீங்கும், பலம், பசி, வளர்ச்சி உண்டாகும்.

## 13. கிட்டக்காடி

கிச்சுக் கிட்டம் — 2 கிலோ இரும்பரப்பொடி — 3 கிலோ
சித்திரமூலம் — 80 கிராம்

திப்பலி | கடுக்காய் | நெல்லிவற்றல்
தான்றிக்காய் | வகை — 200 கிராம்.

தேன் — 3 லீற்றர் | வெல்லம் — 9கிலோ

நீர் — 8 லீற்றர்

அளவு — 5 மி. லீ. — 15 மி. லீ. பாலர்
15 மி. லீ. — 30 மி. லீ. பெரியவர்

தீரும் நோய்கள் — இரத்தபித்தம், கிருமி, பாண்டு, மூலம், குட்டம், காசம், சுவாசம், கபம், சோபை நீங்கும்.

## 14. கோரைக் காடி

| | | |
|---|---|---|
| கோரைக்கிழங்கு — 12 கிலோ | | வெல்லம் — 1 கிலோ |
| கொடிவேலி | ஓமம் | நற்சீரகம் |
| சுக்கு | மிளகு | இலவங்கப்பட்டை |
| வெற்தயம் | வகை — 80 கிறாம் | |

80 போத்தல் நீர் விட்டு 20 போத்தலாக வற்றவைத்து காடி முறைப்படி தயாரித்து வடித்து எடுத்துக்கொள்ளவும்.

அளவு — 5 மி. லீ. — 15 மி. லீ. பாலர்
15 மி. லீ. — 30 மி. லீ. பெரியவர்

தீரும் நோய்கள் — அசீரணம், பசி, மந்தம், கிரகணிரோகம், கழிச்சல், வாந்தி, பேதி நீங்கும்.

## 15. ஆடாதோடைக் காடி

| | | |
|---|---|---|
| ஆடாதோடை இலை — 1 கிலோ | | வெல்லம் — 6 கிலோ |
| சுக்கு | திற்பலி | மிளகு |
| தக்கோலம் | சிறுநாகம்பூ | வெட்டிவேர் |
| ஏலம் | இலவங்கப்பட்டை | இலவங்கப் பத்திரி வகை 40 கிறாம் |

10 போத்தல் நீர்விட்டு 2½ போத்தலாக வற்றவைத்து காடியாக தயாரித்து வடித்துகொள்ளவும்

அளவு — 5 மி. லீ. — 15 மி. லீ. பாலர்
15 மி. லீ. — 30 மி. லீ. பெரியவர்

தீரும் நோய்கள் — தும்மல், இருமல், சளி, முட்டு, தொய்வு, சளிச்சுரம் நீங்கும்.

## 16. சீரகக்காடி

| | | | |
|---|---|---|---|
| நற்சீரகம் — 8 கிலோ | வெல்லம் — 18 கிலோ | | |
| சாதிக்காய் | ஏலம் | இலவங்கப்பட்டை | |
| கராம்பு | தக்கோலம் | இலவங்கப்பத்திரி | |
| கோரைக்கிழங்கு | சிறுநாகம்பூ | ஓமம் | வகை — 40 கிறாம் |
| சுக்கு — 80 கிறாம் | | | |

சீரகத்தை 80 போத்தல் நீர்விட்டு 20 போத்தலாக வற்றவைத்து சரக்குகளை சேர்த்து காடி முறைப்படி தயாரித்துக் கொள்ளவும்.

அளவு — 5 மி. லீ. — 15 மி. லீ. பாலர்
15 மி. லீ. — 30 மி. லீ. பெரியவர்

தீரும் நோய்கள் — பித்தவாய்வு, சூசிகா வாயு, கழிச்சல்; கிரகணிநோய், பசியின்மை நீங்கும்.

## 17. மருதம்பட்டை காடி

அமுக்கிராய் — 200 கிறாம் சடாமஞ்சில் — 200 கிறாம்
மருதம்பட்டை — 8 கிலோ வெல்லம் — 6 கிலோ

மருதம்பட்டையை 60 லீற்றர் நீர்விட்டு 15 லீற்றராக வற்ற வைத்து சரக்குகளை சேர்த்து காடி முறைப்படி தயாரித்துக் கொள்ளவும்.

அளவு — 5 மி. லீ. — 15 மி. லீ. பாலர்
15 மி. லீ — 30 மி. லீ பெரியவர்

தீரும் நோய்கள் — இருதய சுவாசப்பை நோய்கள் நீங்கும், பலம் வீரியம் உண்டாகும்.

## 18. சீந்திற் காடி

| | | | |
|---|---|---|---|
| கோரைக் கிழங்கு | அதிவிடயம் | பற்படாகம் | சுக்கு |
| சிறுநாகம்பூ | கடுகுரோகணி | வெட்பாலரிசி | திற்பலி |
| மிளகு | | | வகை—40 கிறாம் |
| பெருங்குமிழ் | வாதமடக்கி | கண்டங்கத்தரி | நெருஞ்சில் |
| பெருவாகை | வில்வவேர் | | வகை—400 கிறாம் |

சீந்தில் — 4 கிலோ வெல்லம் — 18 கிலோ

60 லீற்றர் நீர்விட்டு 15 லீற்றராக வற்றவைத்து, காடிமுறைப்படி தயாரித்து வடித்து எடுத்து வைத்துக் கொள்ளவும்

அளவு — 5 மி. லீ — 15 மி. லீ பாலர்
15 மி. லீ — 30 மி. லீ பெரியவர்

தீரும் நோய்கள் — சர்வசுரங்கள், பலவித நோய்கள், வாதரத்தம் நீங்கும்

## 19. அமுக்கிராய் காடி

| | | | |
|---|---|---|---|
| கோரைக்கிழங்கு | — 500 கிறாம் | மஞ்சல் | — 500 கிறாம் |
| மருதம்பட்டை | — 500 கிறாம் | அதிமதுரம் | — 500 கிறாம் |
| கொடிவேலி | — 400 கிறாம் | செஞ்சந்தணம் | — 400 கிறாம் |
| நிலப்பனை | — 1000 கிறாம் | நன்னாரி | — 400 கிறாம் |
| ஏலம் | — 100 கிறாம் | கடுக்காய் | — 500 கிறாம் |
| இலவங்கப்பட்டை | — 100 கிறாம் | அமுக்கிராய் | — 2500 கிறாம் |
| மரமஞ்சல் | — 500 கிறாம் | சுக்கு | — 50 கிறாம் |
| மஞ்சிட்டி | — 500 கிறாம் | சிறுநாகம்பூ | — 150 கிறாம் |
| அரத்தை | — 500 கிறாம் | சந்தனம் | — 400 கிறாம் |
| இலவங்கப்பத்திரி | — 100 கிறாம் | சிவதை | — 500 கிறாம் |

தேன் — 18 லீற்றர்

அவிக்கவேண்டிய சரக்குகளை 120 லீற்றர் நீர்விட்ட 30 லீற்றராக வற்றவைத்து காடிமுறைப்படி தயாரித்து வடித்துக்கொள்ளவும்

அளவு — 5 மி. லீ — 15 மி. லீ பாலர்
15 மி. லி — 30 மி. லீ. பெரியவர்

தீரும் நோய்கள் — சுரம், வாதம், மூர்ச்சை, காக்கைவலி, மனக்கோளாறு, வரட்சி, தேக இளைப்பு, மூலம், பசியின்மை தீரும், இரத்தம் சுத்தியாகும். நரம்புகள் பலமடையும்

## 20. அசோகம் பட்டை காடி

| | | | |
|---|---|---|---|
| கோரைக்கிழங்கு | நெல்லிவற்றல் | ஆடதோடைவேர் | கடுக்காய் |
| மாம்பட்டை | மரமஞ்சல் | நற்சீரகம் | சுக்கு |
| சந்தணம் | தான்றிக்காய் | | வகை—50 கிறாம் |

அசோகம்பட்டை — 6 கிலோ வெல்லம் — 12 கிலோ

60 லீற்றர் நீர்விட்டு 15 லீற்றர் ஆக வற்றவைத்து காடிமுறைப்படி தயாரித்துக் கொள்ளவும்

அளவு — 5 மி. லீ — 15 பாலர்
15 மி. லீ— 30 பெரியவர்

தீரும் நோய்கள் — பெரும்பாடு, சுரம், இரத்தபித்தம், மூலம், பசியின்மை, அருசி, மேகம், வீக்கம், கர்ப்பாசய நோய்கள் நீங்கும், கர்ப்பம் உண்டாகும்

## 21. வேப்பம் பட்டை காடி

| | | | |
|---|---|---|---|
| வேப்பம்பட்டை | — 5 கிலோ | கோட்டம் | — 500 கிறாம் |
| நிலவேம்பு | — 500 கிறாம் | பற்படாகம் | — 300 கிறாம் |
| அதிவிடயம் | — 200 கிறாம் | சுக்கு | — 200 கிறாம் |
| பறங்கிக்கிழங்கு | — 600 கிறாம் | வெல்லம் | — 6 கிலோ |

45 லீற்றர் நீர்விட்டு 11 லீற்றராக வற்றவைத்து காடிமுறைப்படி தயாரித்து வடித்துக் கொள்ளவும்

அளவு — 5 மி. லி. — 15 மி. லீ. பாலர்
15 மி. லீ. — 30 மி. லீ. பெரியவர்

தீரும் நோய்கள்— காய்ச்சல், கிருமி, தோல் நோய்கள் நீங்கும்.

## 22. முந்திரிக் காடி

முந்திரிகைவற்றல் — 6 கிலோ

| | | | |
|---|---|---|---|
| கொடிவேலி | தக்கோலம் | இலவம்பட்டை | சிறுநாகம்பூ |
| வால்மிளகு | திற்பலி | இலவங்கப்பத்திரி | கராம்பு |
| சாதிக்காய் | செவ்வியம் | மிளகு | வகை—50 கிறாம் |

சீனி — 16 கிலோ தேன் — 3 லீற்றர்

60 லீற்றர் நீர்விட்டு 15 லீற்றராக வற்றவைத்து காடி முறைப்படி தயாரித்து வடித்துக் கொள்ளவும்

அளவு — 5 மி. லி. — 15 மி. லீ
15 மி. லீ. — 20 மி. லீ

தீரும் நோய்கள்— கிரகணி, மூலம், குன்மம், கிருமி, குட்டம், கண்ரோகம், தலைவலி, சிரசுநோய், தொண்டைநோய், நெருப்புக்காய்ச்சல் நீங்கும். பசி உண்டாம்.

## 23. தசமூலக் காடி

| | | | |
|---|---|---|---|
| சிவனார்வேம்பு | — 200 கிறாம் | பறங்கிக்கிழங்கு | — 500 கிறாம் |
| நன்னாரி | — 200 கிறாம் | கடுக்காய் | — 300 கிறாம் |
| சிறுகுறிஞ்சாவேர் | — 200 கிறாம் | சிறுகாஞ்சோன்றி | — 500 கிறாம் |
| வில்வவேர் | — 200 கிறாம் | நெல்லிவற்றல் | — 600 கிறாம் |
| வெள்ளறுகு | — 200 கிறாம் | கோரைக்கிழங்கு | — 100 கிறாம் |
| பெருங்குமிழ் | — 200 கிறாம் | இயங்கம்வேர் | — 60 கிறாம் |
| பூவரசு | — 200 கிறாம் | சாறணை | — 100 கிறாம் |
| வாய்விடங்கம் | — 100 கிறாம் | சீந்தில் | — 1 கிலோ |
| நிலப்பனை | — 1 கிலோ | கொடிவேலி | — 1 கிலோ |
| தாமரைக்கிழங்கு | — 1 கிலோ | அமுக்கிராய் | — 1 கிலோ |
| முந்திரிகைவற்றல் | — 3 கிலோ | | |

| | | | |
|---|---|---|---|
| ஏலம் | சாதிக்காய் | சிறுநாகம்பூ | இலவங்கப்பட்டை |
| கராம்பு | திப்பலி | வெட்டிவேர் | இலவங்கப்பத்திரி |

வகை — 100 கிறாம்

தேன்—2 லீற்றர் சீனி—16 கிலோ

அவிக்கவேண்டிய சரக்குகளை 60 லீற்றர் நீர் விட்டு 15 லீற்றராக வற்றவைத்து காடிமுறைப்படி தயாரித்துக்கொள்ளவும்

அளவு — 5 மி. லீ. — 15 மி. லீ பாலர்
15 மி. லீ.—30 மி. லீ பெரியவர்

தீரும் நோய்கள் — கிரகணி சுவாசம், காசம், அரோசகம், குன்மம், மெலிவு, பகந்தரம், வாதவியாதிகள், வாந்தி, காமாலை, பாண்டு, குட்டம், மூலம், மேகம், பசியின்மை, பெருவயறு முதலிய நோய்கள், நீர்ச்சுருக்கு, மலட்டுத்தன்மை நீங்கும். உடற்பூரிப்பு, பலம், விந்து அதிகரிக்கும்.

## 24. அத்திக் காடி

அத்திப்பட்டை—4 கிலோ

| | | |
|---|---|---|
| வெண் சந்தணம் | மிளகு | கிரந்தி தகரம் |
| கோரைக் கிழங்கு | இலாமிச்சு | நெல்லிக்காய் |
| செஞ் சந்தணம் | வட்டத்திருப்பி | இலவங்கம் |
| திற்பலி | செவ்வியம் | சடாமாஞ்சில் |

வகை — 50 கிறாம்

சீனி 18 கிலோ

60 லீற்றர் நீர் விட்டு 15 லீற்றராக கியாழம் வைத்து காடி முறைப்படி தயாரித்துக் கொள்ளவும்.

அளவு — 5 மி. லீ. — 15 மி. லீ. பாலர்
15 மி. லீ. — 30 மி. லீ. பெரியவர்

தீரும் நோய்கள் — பெரும்பாடு இரத்த மூலம், கற்பாசய நோய்கள் நீங்கும்.

## 25. நாவல்பட்டை காடி

நாவல் பட்டை — 4 கிலோ

| | | |
|---|---|---|
| மாம் பட்டை | நற்சீரகம் | சுக்கு |
| சந்தனம் | ஆடாதோடை வேர் | கோரைக் கிழங்கு |

வெல்லம் — 8 கிலோ வகை — 100 கிறாம்

45 லீற்றர் நீர் விட்டு 11 லீற்றராக வற்ற வைத்து காடி முறைப்படி தயாரித்துக் கொள்ளவும்.

அளவு — 5 மி. லீ. — 15 மி. லீ. பாலர்
15 மி. லீ. — 30 மி. லீ. பெரியவர்

தீரும் நோய்கள் — வயிற்றுக் கழிச்சல், இரத்த பேதி, பெரும்பாடு, சலத்தில் இரத்தம் போதல், ஆகிய நோய்கள் நீங்கும்.

## 26. கற்பூரத் திராவகம்

ஓமம் — 1 கிலோ கற்பூரம் — 100 கிறாம்
15 லீற்றர்

திராவக முறைப்படி தயாரித்துக் கொள்ளவும்.

அளவு — 5 மி. லீ. — 15 மி. லீ. பாலர்
15 மி. லீ. — 30 மி. லீ. பெரியவர்

தீரும் நோய்கள் — கிருமி, வாந்திபேதி கிருமியினால் ஏற்படக்கூடிய நோய்கள் தீரும்.

## 27. கடுக்காய்க் காடி

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| கடுக்காய் தோல் | — | 500 | கிறாம் | வாய்விடங்கம் | — | 200 | கிறாம் |
| நெல்லிக்காய் | — | 200 | ,, | ஓமம் | | 200 | ,, |
| தான்றிக்காய் | — | 200 | ,, | திற்பலி | — | 200 | ,, |
| கொடிவேலி வேர் | — | 200 | ,, | | | | |

சீனி — 10 கிலோ

60 லீற்றர் நீர் விட்டு 15 லீற்றராக வற்ற வைத்து காடி முறைப்படி தயாரித்துக் கொள்ளவும்.

அளவு — 5 மி. லீ — 15 மி. லீ. பாலர்
15 மி. லீ. — 30 மி. லீ. பெரியவர்

தீரும் நோய்கள் — மலபந்தம், மூலரோகம், பசியின்மை தீரும்.

## 28. கருங்காலிக் காடி

கருங்காலி — 5 கிலோ

கராம்பு, சுக்கு, கடுக்காய், மிளகு, திற்பலி, சீந்தில், கண்டங்கத்தரி, கொடிவேலி வேர், தான்றிக்காய் — வகை — 200 கிறாம்

தேன் — 3 லீற்றர் வெல்லம் — 25 கிலோ

45 லீற்றர் நீர் விட்டு 11 லீற்றராக வற்ற வைத்து காடி முறைப்படி தயாரித்து வடித்துக் கொள்ளவும்.

அளவு — 5 மி. லீ. — 15 மி. லீ. பாலர்
15 மி. லீ. — 30 மி. லீ. பெரியவர்

தீரும் நோய்கள் — சர்ம ரோகம், கிருமி ரோகம், வாதரத்தம் தீரும்.

## 29. நெல்லிக்காய் காடி

நெல்லிக்காய் — 2 கிலோ

பெருங்குமிழ், மிளகு, கடுக்காய், திப்பலி, சந்தணம், வில்வவேர் — வகை — 400 கிராம்

சீனி — 6 கிலோ

தேன் — 3 லீற்றர்

15 லீற்றர் நீர்விட்டு காடிமுறைப்படி தயாரித்து எடுத்துக்கொள்ளவும்.

அளவு — 5 மி. லீ. — 15 மி. லீ.
பாலர் 15 மி. லீ. — 30 மி. லீ. பெரியவர்

தீரும் நோய்கள் — இருமல், சளி, இளைப்பு, பலவீனம் நீங்கும்.

## 30. முடக்கற்றான் காடி

முடக்கற்றான்விதை, நெல்லிவற்றல், திப்பலிமூலம் — வகை — 200 கிறாம்

அரத்தை, வால்மிளகு, சுக்கு, திப்பலி, மிளகு — வகை 100 கிறாம்

இலவங்கப் பட்டை, இலவங்கப்பத்திரி, நாகம்பூ — வகை 40 கிறாம்,

சோம்பு — 50 கிறாம், தேன் — 10 போத்தல்

60 லீற்றர் நீர்விட்டு 10 லீற்றராக வற்றவைத்து காடி முறைப்படி தயாரித்துக் கொள்ளவும்.

அளவு — 15 – 30 மி. லீ. பெரியவர்
5 – 15 மி. லீ. பாலர்

தீரும்நோய்கள் — வாதநோய்கள், துர்நீர், விரணக்கட்டி, குடற்புழுவியாதி தீரும்.

## 31 பனங்கள்ளுக் காடி

| | | | |
|---|---|---|---|
| பனங்கள்ளு | — 10 லீற்றர் | கீழ்காய்நெல்லிச்சாறு | — $\frac{1}{2}$ லீற்றர் |
| கையாந்தகரைச்சாறு | — $\frac{1}{2}$ லீற்றர் | நெல்லிக்காய் சாறு | — $\frac{1}{2}$ லீற்றர் |
| தேசிப்புளி | — $\frac{1}{2}$ லீற்றர் | கழுநீர் | — $\frac{1}{2}$ லீற்றர் |
| திரிபலை தோல் | — 100 கிறாம் | திரிகடுகு தூள் | — 100 கிறாம் |

அயம் — 100 கிறாம் கிச்சக்கிட்டம் 100 கிறாம் காந்தம் 50 கிறாம்

காடி முறைப்படி தயாரித்து எடுத்துக்கொள்ளவும்.

அளவு — 1 மேசைக்கரண்டி

திரும் நோய்கள் — பாண்டு, சோகை, காமாலை, கவிகை, பீலிகை, நீராமை, கிருமி, விப்புருதி, நஞ்சு, சோர்வு, இளைப்பு தீரும்.

## 32. தென்னங்கள்ளுக் காடி

| | | | |
|---|---|---|---|
| தென்னங்கள்ளு | — 10 லீற்றர் | உருக்கு அரபொடி | — 100 கிறாம் |
| திரிபலை | — 100 கிறாம் | திரிகடுகு | — 100 கிறாம் |
| தேசிப்புளி | — $\frac{1}{2}$ லீற்றர் | | |

காடிமுறைப்படி தயாரித்து எடுத்துக்கொள்ளவும்

அளவு 1 மேசைக்கரண்டி

திரும் நோய்கள் — பாண்டு, வீக்கம், ஈரல் வியாதிகள் தீரும்.

## 33. ஆவாரம் காடி

ஆவாரை — 1 கிலோ

| | | | |
|---|---|---|---|
| பூலாங்கிழங்கு | ஏலம் | வாய்விடங்கம் | திரிபலை |
| ஓமம் | செவ்வியம் | கோரைக்கிழங்கு | கொடிவேலி |
| சிறுநாகம் பூ | மிளகு | கோட்டம் | நிலவேம்பு |
| கடுகுரோகிணி | பெருங்கோரை | அதிவிடயம் | மலைதாங்கி |

வகை—40 கிறாம்

தேன் — 6 லீற்றர்

40 லீற்றர் நீர் விட்டு 10 லீற்றராக வற்றவைத்து காடி முறைப்படி தயாரித்துக் கொள்ளவும்.

அளவு — 15—30 மி. லீ.

திரும் நோய்கள் — உடற்சூடு, மேக ரோகங்கள், சல எரிவு, அதிமூத்திரம்.

# பாணி

## 1. ஆடாதோடைப் பாணி

ஆடாதோடை — 1 கிலோ        சீனி — 1 கிலோ

பாணி முறைப்படி தயாரித்துக் கொள்ளவும்.

அளவு — ஒரு தேக்கரண்டி (4 மி. லி.) ஒரு மேசைக் கரண்டி (15 மி லி.)

தீரும் நோய்கள் — இருமல், முட்டு, தொய்வு, இழுப்பு, சளி, முதலிய கபரோகங்கள் தீரும்

## 2. அதிமதுரப் பாணி

அதிமதுரம் — 1 கிலோ        சீனி — 1 கிலோ

பாணி முறைப்படி தயாரித்துக் கொள்ளவும்.

அளவு — ஒரு தேக்கரண்டி (4 மி. லி.) ஒரு மேசைக் கரண்டி (15 மி. லி.)

தீரும் நோய்கள் — வாய்ப்புண், அக்கரம், இருமல், சளி, தொண்டைக் கரகரப்பு தீரும்.

## 3. சித்த சிவாமிர்தப் பாணி

| | | |
|---|---|---|
| சிவந்தி | வல்லாரை | சாத்தாவாரி |
| அமுக்கிராய் | நிலப்பனை | சீனி |

பாணி முறைப்படி தயாரித்துக் கொள்ளவும்.

அளவு — ஒரு தேக்கரண்டி (4 மி. லி.) ஒரு மேசைக்கரண்டி (15 மி. லி.)

தீரும் நோய்கள் — நித்திரையின்மை, உடற்சூடு, உடல் மெலிவு, ஞாபக மறதி, தாது வெப்பம். உடல் பலவீனம் தீரும்.

# மருத்தெண்ணெய்கள்

எண்ணெய்க்கு சேரும் சரக்குகளை இடிக்கக்கூடியவற்றை இடித்து சூரணித்து எடுத்தும், இடிக்க முடியாதவற்றை நன்கு அரைத்தெடுத்தும் வைத்துக்கொண்டு, சாறுகளையும், பால், இளநீர் முதலியவற்றையும் எண்ணெயையும் ஒன்றாகச் சேர்த்து அடுப்பேற்றி சாறுகள் வற்றிவரும் நேரத்தில் இடித்த தூளையும் கல்கத்தையும் ஒன்றாகச் சேர்த்துக் காய்ச்சி கடுகு மெழுகு பதம் வரும்பொழுது இறக்கி வடித்து எடுத்துக் கொள்ள வேண்டும். சில எண்ணெய் வகைகளில் கடுகு உலிர் பதத்திலும் எடுத்துக்கொள்ள வேண்டும். சேர்க்கும் எண்ணெய் வகைகளும் பொதுவாக நல்லெண்ணையாக இருந்தாலும் சில மருத்தெண்ணெய்களுக்கு தேங்காய் நெய், இருப்பை நெய், புங்க நெய், வேப்ப நெய், ஆமணக்கு நெய், பசுநெய் முதலியனவும் சேர்த்துக் காய்ச்சப்படுகின்றன. எந்த நோய்க்கு எந்த எண்ணெய் குணமளிக்குமோ அந்த எண்ணெய்யை அறிந்து காய்ச்சவேண்டியது திறமையுள்ள மருத்துவரின் கடமையாகும். எண்ணெய் வடிக்கப் பட்ட பின்னர் அதன் கடுகும் மருத்துவர்களால் மருந்தாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

## 1. பீநச எண்ணெய்

| | | | |
|---|---|---|---|
| அரத்தை | திற்பலி | சதகுப்பை | சுக்கு |
| மதுரம் | ஆமணக்கம் வேர் | தேற்றாவிதை | வாய்விடங்கம் |
| | | | வகை 40 கிறாம் |

| | | |
|---|---|---|
| நொச்சிச்சாறு | கையாந்தகரைச் சாறு | |
| எண்ணெய் | வெள்ளாட்டுப்பால் | வகை $1\frac{1}{2}$ லிற்றர் |

தீரும் நோய்கள் — தலைக்கு வைத்துவர தும்மல், முட்டு, நாசடைப்பு, பீநசம், மூக்கு நீர்ப்பாய்ச்சல், சுவாசநோய் தீரும்.

## 2. மெழுகு எண்ணெய்

| | | | |
|---|---|---|---|
| அதிமதுரம் | மஞ்சிட்டி | பால்சாம்பிராணி | |
| தேன்மெழுகு | நன்னாரி | | வகை 20 கிறாம் |

தேங்காய் எண்ணெய் — 1 லீற்றர்

தீரும் நோய்கள் — நோவு, கண்டல், வீக்கம், விரணம், அவியல், தீப்புண், உளைவு தீரும்.

## 3. வாதநாச எண்ணெய்

| | | |
|---|---|---|
| பெருமருந்து | கையாந்தகரை | கவிழ்தும்பை |
| நிலப்பனை | புங்கு | உவாய் |
| இயங்கு | தயிர்வளை | திராய் |
| பீச்சுவிளாத்தி | களப்பனை | இலைக்கள்ளி |
| சித்தமட்டி | உள்ளி | கடுகு |
| இலவங்கம் | பெருங்காயம் | சதகுப்பை |
| மிளகு | சாதிக்காய் | கல்மிருசு |
| குந்திருக்கம் | கொடிவேலி | வகை 10 கிறாம் |

| | | |
|---|---|---|
| இலுப்பெண்ணெய் | நல்லெண்ணெய் | |
| ஆமணக்கெண்ணெய் | பசுப்பால் | வகை 1 லீற்றர் |

திரும் நோய்கள் உள்ளுக்கும், தலைக்கும், வெளிக்கும் பாவித்துவர வாதநோய்கள் 84, குத்துளைவு, பிடிப்பு, வீக்கம், நோவு, வழங்காமை தீரும்.

## 4. நீலியாதி எண்ணெய்

| | | | |
|---|---|---|---|
| நெல்லிவற்றல் | குண்டுமணிப்பருப்பு | அதிமதுரம் | சடாமாஞ்சில் |
| | | | வகை 40 கிறாம் |
| அவுரி இலைச்சாறு | கையாந்தகரைச்சாறு | எண்ணெய் | |
| | | | வகை 1 லீற்றர் |

திரும் நோய்கள் — தலைக்குப் பிரட்டிவர கண்ரோகம், தலைமயிர் நரைத்தல், மயிர் உதிர்தல், சொடுகு, விரணம், தலைக் கடி, அவியல் தீரும். கண்குளிர்ச்சி உண்டாகும்.

## 5. பொன்னாங்காணி எண்ணெய்

| | | | |
|---|---|---|---|
| மதுரம் | கராம்பு | சடாமஞ்சில் | கோட்டம் |
| கோரை | ஏலம் | சண்பகப்பூ | வகை 40 கிறாம் |
| பொன்னாங்காணிச்சாறு | பசுப்பால் | எண்ணெய் | |
| | | | வகை 2 லீற்றர் |

திரும் நோய்கள் — கண்ரோகம், தலைக்கொதி, சூடு, நித்திரைக்குறைவு தீரும். உடல், கண் குளிர்ச்சி உண்டாகும். தலைக்கு பாவிக்கவும்.

## 6. கரப்பான் எண்ணெய்

| | | | |
|---|---|---|---|
| கஸ்தூரிமஞ்சள் | நன்னாரி | கார்புகா அரிசி | ஏலம் |
| மஞ்சள் | மஞ்சிட்டி | இயங்கு | வேம்பாடல் |
| மிளகு | சித்திரமூலம் | மரமஞ்சள் | சிவனார்வேம்பு |
| கருஞ்சீரகம் | நீரடிமுத்து | | வகை 10 கிறாம் |
| தேங்காய் எண்ணெய் | தேங்காய்ப்பால் | | வகை 1 லீற்றர் |

திரும்நோய்கள் — கரப்பன் 8, கிரந்தி, அவியல், புண், துர்நீர், விரணம், தோல் வியாதிகள், தேமல் தீரும். வெளிப்பாவனைக்கு மாத்திரம்

## 7. கிரந்தி எண்ணெய்

| | | | |
|---|---|---|---|
| செஞ்சந்தனம் | செவ்வள்ளி | கராம்பு | மிளகு |
| உள்ளி | சாதிக்காய் | சிறுநாகம்பூ | மாயாக்காய் |
| வலம்புரி | ஏலம் | வெளுத்தல் | வசம்பு |
| ஓமம் | பீனாறி | திற்பலி | இருசிரகம் |
| வேம்பாடல் | சுக்கு | | வகை 5 கிறாம் |

செவ்வரத்தம் பூ — 100 எண்ணெய் — 1 லீற்றர்

திரும் நோய்கள் — உள்ளுக்கும், தலைக்கும். மேலுக்கும் பாவித்துவர கிரந்தி, அவியல், விரணம், தோல் நிறம்மாறல், சொறி, கடி, கிரந்திச்சனி, கிரந்தி முட்டு தீரும்.

## 8. பச்சை எண்ணெய்

துரிசு — 80 கிறாம்

தேங்காய் எண்ணெய் பூமத்தம்சாறு வகை 1 லீற்றர்

திரும் நோய்கள் — வெளியில் பாவித்துவர விரணம், கீழ்விரணம், சவ்வுள்ள விரணம், காது விரணம் திரும்.

## 9. சிரங்கு எண்ணெய்

| | | | |
|---|---|---|---|
| கந்தகம் | மிளகு | ஏலம் | வேம்பாடல் |
| மஞ்சல் | காட்டுச்சீரகம் | | வகை 20 கிறாம் |

தேங்காய் எண்ணெய் — 1 லீற்றர்

திரும் நோய்கள் — வெளியில் பாவித்துவர சிரங்கு, புண், அவியல், தோல்வியாதிகள் திரும்.

## 10. அமிர்தசந்தனாதி எண்ணெய்

| | | | |
|---|---|---|---|
| மிளகு | சண்பகப்பூ | சடாமஞ்சில் | மதுரம் |
| ஏலம் | கஸ்தூரிமஞ்சல் | கோட்டம் | இலவங்கம் |
| கோரைக்கிழங்கு | நற்சீரகம் | லாமிக்சு | சந்தனம் |
| | | | வகை 10 கிறாம் |

| | | |
|---|---|---|
| பால் | கையாந்தகரைச் சாறு | |
| நெல்லிச்சாறு | நல்லெண்ணெய் | |
| சீந்திற்சாறு | | வகை 1 லீற்றர் |

திரும் நோய்கள் — தலைக்குப் பாவித்துவர உச்சிக்கொதி, உடற்சூடு, தும்மல், கண் ரோகம், இளநரை திரும்.

## 11. தாளங்காய் எண்ணெய்

| | | |
|---|---|---|
| சந்தனம் | சதகுப்பை | குக்கில் |
| மரமஞ்சள் | தேவதாரு | பச்சிலை |
| இலாமிச்சு | இந்துப்பு | கோட்டம் |
| சிற்றாமட்டி | நன்னாரி | செவ்வள்ளி |
| பேராமட்டி | மதுரம் | வெளுத்தல் |
| நற்சீரகம் | தக்கோலம் | இருவேலி |
| கருஞ்சீரகம் | ஏலம் | அரத்தை |
| சித்திரமூலம் | | வகை — 10 கிறாம் |

தாளங்காய், நல்லெண்ணெய், பசுப்பால் வகை — 1 லீற்றர்

திரும்நோய்கள் — தலைக்கும், மேலுக்கும் பாவிக்க வாதசம்பந்தமான எல்லா நோய்களும் தீரும். பிடிப்பு, உளைவு, குத்து, உட்காய்ச்சல், வீக்கம், நோவு, உச்சிக்குத்து, கபால இடி தீரும்.

## 12. நெல்லிக்காய் எண்ணெய்

| | | |
|---|---|---|
| சந்தணம் | கோரைக்கிழங்கு | அரத்தை |
| வெட்டிவேர் | மதுரம் | இலாமிச்சு |
| கடுகுரோணி | | வகை — 40 கிறாம் |

| | |
|---|---|
| நெல்லிச்சாறு | கையாந்தகரைச்சாறு |
| பொன்னாங்காணிச்சாறு | பால் |
| எண்ணெய் | வகை — $1\frac{1}{2}$ லீற்றர் |

திரும்நோய்கள் — தலைக்கு பாவிக்க, பித்தக் கிறுகிறுப்பு, தலைச்சுற்று, செங்கமாரி, கண்கலங்கல், கண் எரிவு, காசம், சூடுதீரும், குளிர்ச்சியுண்டாக்கும்.

## 13. இயங்கவேர் எண்ணெய்

| | | |
|---|---|---|
| கருஞ்சீரகம் | ஏலம் | |
| மிளகு | மாயாக்காய் | |
| வேம்பாடல் | நீரடிமுத்து | வகை — 40 கிறாம் |

இயங்கம் வேர்ப்பட்டை — 5 கிலோ   எண்ணெய் — 2 லீற்றர்

இயங்கம் வேர்ப்பட்டையை 8 லீற்றர் நீர்விட்டு 2 லீற்றராக வற்றவைத்து எண்ணெயை முறைப்படி காய்ச்சிக் கொள்ளவும்.

திரும்நோய்கள் — தலைக்கும் வெளிக்கும் பாவித்துவர — தலை அவியல், கிரந்தி அவியல், சொறிசிரங்கு, கரப்பான், விரணம், கெண்டைக்காலவியல் தீரும்.

## 14. வெற்றிலைச்சாற்றெண்ணெய்

| | | |
|---|---|---|
| வேம்பாடல் | செஞ்சந்தனம் | மதுரம் |
| செவ்வள்ளி | மாயாக்காய் | கைப்பு |
| கடுகு | வெளுத்தல் | கருஞ்சீரகம் |
| களிப்பாக்கு | சாதிக்காய் | சந்தனம் வகை — 10கிறாம் |
| எண்ணெய் | வெற்றிலைச்சாறு | |
| மிளகுக் கொழும் | கையாந்தகரைச்சாறு | வகைக்கு — 2 லீற்றர் |

தீரும்நோய்கள் — தலைக்கு வைத்துவர தும்மல், மூக்கடைப்பு, மூக்கு நீர்ப்பாய்ச்சல், சளி, தலைநோவு, இருமல், தொண்டைக்கரப்பு, முட்டு, தொய்வு, பீநசதலையிடி தீரும்.

## 15. வேலம்பட்டை எண்ணெய்

| | | |
|---|---|---|
| அதிமதுரம் | வெள்ளிலோத்திரா | மஞ்சிட்டி |
| ஓமம் | ஏலம் | அகில் |
| சாதிக்காய் | இலவம்பட்டை | கராம்பு |
| பெருங்குமிழ் | கோரைங்கிழங்கு | காட்டாத்தி |
| தக்கோலம் | கோட்டம் | காசுக்கட்டி |
| பச்சிலை | சண்பகப்பூ | வகை— 10 கிறாம் |

வெள்வேலம்பட்டை — 8 கிலோ எண்ணெய் — 2 லீற்றர்

தீரும்நோய்கள் — எண்ணெயை துணியில் நனைத்து வாய்க்குள் அடைசி வைத்திருக்க முரசு கரைதல், பல்வலி, பல் ஆட்டம், வாயவியல், நாக்கு அவியல்' முரசு வீக்கம், இரத்தம் வடிதல், பற்பேத்தை தீரும்.

## 16. மஞ்சள் எண்ணெய்

| | | | |
|---|---|---|---|
| உள்ளி | மிளகு | வால்மிளகு | கடுக்காய் |
| மஞ்சள் | கருஞ்சீரகம் | காயம் | வெளுத்தல் |
| சாவியா | கரியபவளம் | சுக்கு | கடுகு வகை— 30 கிறாம். |

மஞ்சள் சாறு எண்ணெய் வகை— 4 லீற்றர்

தீரும் நோய்கள் — வெளிப்பாவனைக்கு எல்லாவித நோவுகள், அடிபட்ட கண்டல், வீக்கம் தீரும்.